பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 01 வெள்ளிக்கிழமை (17.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 324

# யுத்தம் நிறுத்தப்பட மாட்டாது
# கருணாநிதிக்கு மஹிந்தா பதில்!



## புலிகளின் விஷமப் பிரசாரத்தால் தவறாக நடக்கின்றதாம் தமிழகம்



கொழும்பு, ஒக்ரோபர். 17

"தமிழக முதல்வர் மு. கருணாநிதி மற்றும் விடுதலைப் புலிகள் சார்பு அரசியல்வாதிகள் கோரியிருக்கின்றமைபோல வன்னி இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவோ, யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்தவோ இலங்கை அரசு தயாரில்லை."

இதனை இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு அறிவித்திருக்கின்றார். புலிகளின் பொய்ப்பிரசாரங்களால் தமிழகம் தவறாக நடந்துகொண்டிருக்கிறது என்றும் ஜனாதிபதி விசனித்திருக்கிறார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன்சிங்கின் கருத்து முக்கியமான ஒன்றாக எமது நாட்டினால் கவனத்தில் கொள்ளப்படும்

### இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் கூறுகிறார்



புதுடில்லி, ஒக். 17

இலங்கையில் இப்போது உருவாகியுள்ள நிலைமை மிகுந் த கவலை அளிப்பதாக பிரதமர் மன்மேகன்சிங் தெரிவிக்கும் கருத்து, எமது நாட்டினால் மிகவும் முக்கியமான ஒன்றாக கவனத்தில் கொள்ளப்படும்.

இந்தியா எப்போதும் இலங்கை மக்களுக்கு வெகு பிரியத்துக்குரிய (Very Dear) நாடாகவே திகழ்கின்றது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நெருக்கமான உணர்வு பூர்வமானநட்புறவே இதற்குக் காரணமாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சரிவராது

### இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது

புதுடில்லி, ஒக்.17

இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் மோதல்களின் காரணமாக பொதுமக்கள் மீது ஏற்படும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து இந்திய மீண்டும் கவலை தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று வெளியிட்டுள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் நேற்று 5 மணிநேரமாக கடும் சண்டை

### முன்நகர்வு முறியடிக்கப்பட்டதாக புலிகள் தெரிவிப்பு

### படையினர் பதினைந்து பேர் பலி; 40 பேர் காயம்

கிளிநொச்சி, ஒக்.17

முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை தொடர்ச்சியாக இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றது.

படையினரின் முன்னகர்வு(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா எம்மை என்ன செய்துவிட முடியும்? அதன் அச்சுறுத்தலுக்கு அடிபணியக்கூடாது!

### விமல் வீரவன்ச கர்ச்சிக்கிறார்



கொழும்பு, ஒக். 17

இந்தியாவின் அச்சுறுத்தலுக்கு அடிபணியலாகாது. அவர்களால் எம்மை என்ன செய்து விட முடியும். மிஞ்சினால் வான் பரப்பில் இருந்து பருப்பு மூடைகளையே போட முடியும்.

இவ்வாறு தேசபற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளரான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் கூறியதாவது:

வேலுப்பிள்ளை பிரபாகரனை பாதுகாப்பதற்காக வாஷிங்டனும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் 21ஆம் திகதி மனிதச் சங்கிலிப் போர்!

சென்னை, ஒக். 17

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக - மஹிந்த அரசைக் கண்டித்து - சென்னையில் மனிதச்சங்கிலிப் போராட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி மாலை நடைபெறும் என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

நமது தமிழ் மக்கள் இலங்கையில் படும் தொல்லைகள், கொடிய துன்பங்களில் இருந்து விடுபட்டு இனப்படுகொலை நிறுத்தப்பட்டு நிலையான அமைதி காண்பதற்கு தமிழக அரசின் சார்பில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் ஆறு தீர்மானங்களையும் நினைவூட்டி வலியுறுத்திட அனைத் துக் கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் சென்னையில் மாபெரும் மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடைபெறும்.

சென்னையில் உள்ளவர்கள் மாத்திரமல்லாமல், பிற மாவட்டங்களில் உள்ளவர்களும் கலந்துகொள்ளக்கூடிய பிரமாண்டப் பேரணியாக அது(16 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவை அண்டிய மணியங்குளம் தம்வசம் வந்துவிட்டதாக படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.17

கிளிநொச்சி, நாச்சிக்குடாவுக்கு வடகிழக்கே உள்ள மணியங்குளப்பகுதி தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ்வந்திருக்கிறது என்று படைத்தரப்பினர் நேற்றிரவு அறிவித்தனர்.

நேற்றுமாலை அந்தப்பகுதியை நோக்கி ஆரம்பித்த மோதலில் 6 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். உயிரிழந்த புலிகளின் சடலங்கள் மீட்கப்பட்டது (16 ஆம் பக்கம் பார்க்க)





சூரியன் FM ( யாழ்ப்பாணம் 93 MHz ) ஊடாக
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியை சனிக்கிழமை
காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளைக் கேளுங்கள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களைத் தாங்கி
வருகின்றது "மீண்டும் வாழ்வோம்".
இது உங்கள் கதைகளை சொல்லும் நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு : மீண்டும் வாழ்வோம் 1039 கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருநெல்வேலியில் ஒரு பிள்ளையின் தந்தை பட்டப் பகலில் நேற்று சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஒக். 17

திருநெல்வேலி, காளிகோயில் வீதியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இருபாலை, கட்டப்பிராயைச் சேர்ந்த சந்தியாம்பிள்ளை ஸ்ரனிஸ்ஸஸ் அமலதாஸ் (வயது 42) எனும் ஒரு பிள்ளையின் தந்தையே பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவரது மரணம் குறித்து யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

கொலையுண்டவர் தமது மனைவியைப் பிரிந்து வாழ்கிறார். மனைவியின் சகோதரி இவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்து வந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி, காளிகோயில் வீதியில் உள்ள தமது சகோதரியின் வீட்டுக்கு சென்று விட்டு வெளியில் வந்த அமலதாஸ் ஆயுததாரிகளால் சுடப்பட்டார். என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(அ-1-78-25)

# உயிர் அச்சுறுத்தல் காரணமாக இருதினங்களில் ஐவர் சரணடைந்தனர்

யாழ்ப்பாணம், ஒக்.17

உயிர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த இரு தினங்களில் ஐவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரண் அடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் சுன்னாகம், கந்தரோடையைச் சேர்ந்தவர்களான 37 வயதுடைய கூலித்தொழிலாளியும் 25 வயதுடைய மாணவனும் சரண் அடைந்துள்ளனர்.

சரசாலையைச் சேர்ந்த 23 வயதுடைய கூலித்தொழிலாளியும் அல்வாய் மேற்கைச் சேர்ந்த 38 வயதுடைய வர்த்தகரும் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த 28 வயதுடைய சாரதியும் நேற்று ஆணைக்குழுவில் சரண் அடைந்தனர்.

சரண் அடைந்தவர்களை பாதுகாப்பாகத் தங்க வைக்க ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

(1-25)

# முக்கிய தேவைகளுக்கு சிமெந்து; இன்று முதல் வணிகர் கழகம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஒக்.17

பொதுமக்களுக்கு சிறுசிறு முக்கிய தேவைகளுக்குரிய சிமெந்து இன்று தொடக்கம் யாழ். வணிகர் கழகத்தால் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள பொதுமக்கள், தமது சிமெந்துத் தேவை குறித்த உண்மைத் தன்மையை கிராம சேவை அலுவலர் மற்றும் உதவி அரசாங்க அதிபரைக் கொண்டு உறுதிப்படுத்தி சிபார்சுக் கடிதத்தை சமர்ப்பித்தால் மட்டுமே சிமெந்து வழங்கப்படும் எனவும் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

ஒவருக்கு ஆகக்கூடிய பத்து பைக்கற் சிமெந்து மட்டுமே வழங்கப்படும். பொது மக்களின் முக்கிய அவசிய தேவைகளுக்கு மட்டுமே சிமெந்து விநியோகிக்கப்படும் என்று வணிகர் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ)

# தகவல் தொடர்பாடல் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.17

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர் செல்வி நித்தியா குணராஜா எழுதிய "தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்" நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சு.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில்,வலிகாமக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுகுமாரன் பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.கந்தசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(204)

# புகைப்படக் கண்காட்சி நாளை வரை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை நடத்திவரும் வர்ணப் புகைப்படக் கண்காட்சி நாளை சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பலரின் வேண்டுகோளுக்கிணங்க கண்காட்சி நீடிக்கப்பட்டுள்ளது என்று பேரவை அறிவித்துள்ளது.

(1)

# இடம்பெயர்ந்தோர் நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 17

குடாநாட்டில் 11.08.2006க்கு முன் இடம் பெயர்ந்தவர்களுக்குரிய ஒக்ரோபர் மாதத்திற்கான நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

இந்த விநியோகத்திற்கான வழங்கற் கட்டளைகளை இன்று முதல் செயலகத்தில் பெற்று விநியோகத்தை எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

(1)

# யாழ். வலய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பங்குபற்றும் சகல அணிகளையும் உரிய நேரத்திற்கு சமூகமளிக்குமாறு யாழ். வலய உடற்கல்விப் பணிப்பாளர் க. குமாரசாமி கேட்டுள்ளார்.

(1)


## மணிவிழா நாயகனைப் பாராட்டுகின்றோம்



எமது கல்வி வலயத்தில் நீண்டகாலம் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி நாளை (18.10.2008) சனிக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும்

திரு.இளையதம்பி நாகராசா

அவர்களை நீடூழிகாலம் சகல வளங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வளமுடன் வாழ்த்தும் வலயக் கல்விப் பணிப்பாளரும்,
பணியாளர்களும், யாழ்.கல்வி வலயம்.


# கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.17

வலிகாமம் கல்வி வலயம் நடத்தும் பாற்பொருள் தொடர்பான கட்டுரைப் போட்டியின் எழுத்துப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (202)


## மரண அறிவித்தல்

### திருமதி வடிவேலு பவளம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட வடிவேலு பவளம் நேற்று முன்தினம் (15.10.2008) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், திருஞானசம்பந்தரின் அன்புச் சகோதரியும், திருநாவுக்கரசு சௌர்ணம்மாவின் மைத்துனியும், முருகதாஸ், சண்முகதாஸ், மதுரநாயகி, சிவசோதி, சிவகௌரி ஆகியோரின் தாயும், தயாரூபி, கமலினி, பரமேஸ்வரன், சிவானந்தன், நந்தகுமார் ஆகியோரின் மாமியாரும், அபிராம், அர்ச்சனா, கேசவன், கபிஷன், வைஷ்ணவி, சாஜகி, சாருஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முருகதாஸ் (மகன்),
சிவானந்தன் (மருமகன்).

தாவடி வடக்கு,
கொக்குவில்.


# பகவத்கீதை உபந்நியாசம்

யாழ்ப்பாணம், ஒக்.17

கோண்டாவில் கிழக்கு, நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பகவத்கீதை உபந்நியாசம் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கீதோபதேச வித்தகர் எஸ்.கே.என்.தவராஜா பகவத்கீதை உபந்நியாசம் நிகழ்த்துவார். (204)


## யாழ். திருச்சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம்

தேசத்திற்கு சேமத்தைக் கொடுப்பேன்.
*(11நாளாகமம் 7.14)*

நாளை (18.10.2008) சனிக்கிழமை 9.30 மணியளவில் தேசத்தின் அமைதிக்கான ஜெப ஒன்று கூடல் கீழ்க்காணும் இடங்களில் நடைபெறவுள்ளதால் கலந்து ஜெபிக்க அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்.

இடம்:- A.O.G சபை யாழ்ப்பாணம்,
அப்போஸ்தலர் சபை உடுவில், நாற்சதுர சபை அச்சுவேலி,
மீட்பின் குரல் பண்டத்தரிப்பு, அப்போஸ்தலர் சபை ஊர்காவற்றுறை.

(79283) யாழ்.திருச்சபை நிர்வாகம்.



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராகக் கடமையாற்றி தற்போது வலி - வடக்கு ப.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளராகப் பணிபுரியும் திரு.த.கவிந்திரதாஸ் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி தங்கராசா இராசம்மா

அவர்களின் பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர், பொதுமுகாமையாளர்,
இயக்குநர்கள், பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் ப.நோ.கூட்டுறவுச் சங்கம்.



## மரண அறிவித்தல் இறுதிக்கிரியை நாளும் நேரமும் மாற்றம்



அல்வாய் வடக்கு R.C.T.M.S பாடசாலையின் அதிபர்

### வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தியின்

இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை (18.10.2008) மு.ப. 10 மணிக்கு அல்வாய் மேற்கு திக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உதயன் பத்திரிகையின் (உள்ளே) பத்தாம் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பது போன்று இறுதிக் கிரியைகள் இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற மாட்டா என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தங்கராசா (சிறியதந்தை),
Dr.இளங்கோஞானியார் (மைத்துனர்),
க.சிறிரங்கன் (மைத்துனர்).

(79286)



## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராசா இராசம்மா



கோப்பாய் தெற்கு, கிளுவானை ஒழுங்கை யைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு உலவிக்குளப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா இராசம்மா அவர்கள் நேற்று (16.10.2008) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி தங்கராசாவின் பாசமிகு மனைவியும், கவிந்திரதாஸ் (பொதுமுகாமையாளர், அச்சுவேலி ப.நோ. கூ. சங்கம்), ரவிந்திரதாஸ் (கட்டடப் பரிசோதகர், பாடசாலை வேலைப் பகுதி, மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்), தவிந்திரதாஸ் (ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாலினி (அமரர்), கமலநாயகி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், கந்தையா (அமரர்), சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர்), இராசரத்தினம் (அமரர்), தெய்வேந்திரராசா (கோப்பாய்) ஆகியோரின் சகோதரியும், பிறேமிலா, திருமகள், கனிதா, சங்கீதா, கலைச் செல்வி, கிறிஷாணி, கிறிஷாந்தன் ஆகியோரின் பேர்த்தியும், கந்தையா (அமரர்), நாகம்மா (இந்தியா), அன்னராசா (அமரர்), சிவபாக்கியம் (கொழும்பு), கனகரத்தினம் (அமரர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் (அச்சுவேலி தெற்கு) இன்று (17.10.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த.தவிந்திரதாஸ் (பொலிஸ்),
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
தொ.பே.: 060 221 4152, 060 221 4281

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பேரவலத்தில் வன்னி அகதிகள்

தமிழர் தாயகத்தின் மையநிலமான வன்னிப் பெரு நிலப்பரப்பு மீது இலங்கை அரசுப் படைகள் தொடுத்திருக்கும் கொடூர யுத்தத்தினால் இடம் பெயர்ந்து அல்லற்படும் சுமார் இரண்டேகால் லட்சம் அகதிகளின் நிலைமை பேரவலக் கட்டத்தை எட்டியிருப்பதாக ஐ.நா. அபாய அறிவிப்புச் செய்திருக்கின்றது.

அந்த மக்களின் நிலைமை நாளுக்கு நாள் மிக மோசமாகி வருகின்றது. அங்கிங்கு என அலைந்து தங்குமிட வசதிகளின்றி அல்லோலகல்லோலப்படும் இந்த மக்களின் கஷ்டங்கள் எழுத்தில் வர்ணிக்க முடியாதவை என்கின்றன வன்னிச் செய்திகள்.

ஏற்கனவே பல தடவைகள் இடம்பெயர்ந்து, இடம் பெயர்ந்து களைத்துப்போன இந்த மக்கள், தங்களைத் துரத்திவரும் யுத்தப் பேரரக்கனின் கொடூரப் பிடியிலிருந்து தப்புவதற்காக அவ்வப்போது இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இப்போது இடம்பெயர்ந்தவர்கள், பாதுகாப்புக் கருதி ஏ - 35 வீதியை அண்டி - நெற்பயிர் செய்கை பண்ணப்படும் காணிகளில் தற்காலிக கொட்டகைகளை அமைத்துத் தங்கியுள்ளனர் என ஐ.நாவின் குறிப்புக் கூறுகின்றது.

இந்த இடங்கள், மக்கள் தங்குவதற்கான குடியிருப்புகளுக்குப் பொருத்தமற்றவை என ஏற்கனவே மனிதாபிமான அமைப்புகளினால் அடையாளம் காணப்பட்டவை.

ஆனால் சர்வதேச தொண்டர் அமைப்புகள், அரசசார்பற்ற மையங்கள் போன்றவற்றைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்திலிருந்து அரசு வெளியேற்றியமையை அடுத்து இந்த மக்களை வழிப்படுத்தும் மனிதாபிமானத் தொண்டர் அமைப்புகள் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே நெற்காணிகளை அண்டி இப்போது மக்கள் குடியேறியிருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

மழைகாலம் ஆரம்பித்து விட்டதால் இந்த மக்களின் குடியிருப்புகள் தண்ணீரில் மூழ்கும் ஆபத்தும் ஏற்பட்டிருப்பதாக எச்சரிக்கப்படுகின்றது. அப்படி ஒரு நிலைமை உருவானால் இந்த மக்கள் 'சட்டியிலிருந்து அடுப்புக்குள் வீழ்ந்தமை மாதிரியான' நெருக்கடிக்குள் சிக்குவர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

திடீரென முன்னெடுக்கப்படும் படை நடவடிக்கைகளால் வன்னிக்குள் இடம்பெயரும் மக்கள் தமது குடியிருப்புகள், வீடு, வாசல்களை விட்டு வெளியேறி பற்றைகள், புல்வெளிகள் ஆகியவற்றிலும் காட்டில் மரங்களுக்குக் கீழும் தங்கியுள்ளனர்.

இப்போது கொட்டத் தொடங்கியிருக்கும் பருவமழையால் வெள்ளம் தேங்கி, ஒதுங்க இடமின்றி, பேரின்னலில் சிக்கியிருக்கும் மக்களை, மழை வெள்ளத்தால் காடுகளின் புதர்களை விட்டு வெளியேறும் பாம்புகள் மற்றும் விஷ ஜந்துக்களும் பதம் பார்க்கத் தொடங்கிவிட்டன.

கடந்த ஒருவார காலத்தில் மட்டும் கிளிநொச்சியில் இயங்கும் தர்மபுரம் வைத்தியசாலையில், பாம்புக் கடிக்கு இலக்கான நூற்றியிருபது பொதுமக்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். பாம்புக்கடிக்கு இலக்கான ஒரு சிறுமி உயிரிழந்திருக்கின்றாள்.

மழை வெள்ளம் ஒருபுறம், விளக்கு எரிக்க மண்ணெண்ணெய் கூட இல்லாத நெருக்கடியில், காட்டு இருளுக்குள் அகப்பட்டு அல்லாடும் அப்பாவி மக்களை இலங்கைப் படைகளின் கொடூரக் குண்டுவீச்சு விமானங்களும், ஹெலிகளும் 'இலக்கு' வைக்கின்றமை போல விஷ ஜந்துக்களும் இலக்குவைக்கின்றன.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களின் கூட்டத்தைத் தினசரி வங்கிக் கிளைகளின் முன்னாலும் வைத்தியசாலைகளிலும் காணமுடியும் என்கின்றது ஐ.நா. அறிக்கை.

தங்களிடம் எஞ்சியுள்ள ஓரிரு நகைகளை 'வித்துச் சுத்தியோ' அல்லது அடகு வைத்தோ பணத்தைத் திரட்டித்தான் ஒரு வாய் சோறுக்கு ஆவன செய்யமுடியும் என்ற அவலம் அவர்களுக்கு.

அதேவேளை, சுத்தமான குடிதண்ணீர் இல்லை, மருந்து வகைகள் இல்லை, சுகாதார வசதிகள் இல்லை என்பன போன்ற நெருக்கடிகள் மக்களை நோய்கள், பிணிகளுக்குள் ஆழ்த்தி வைத்தியசாலைகளை நாட வைக்கின்றன.

இப்போது இடம்பெயர்ந்துள்ள மக்களில் ஐம்பதில் ஒருவர் சுத்தமான குடிதண்ணீர் இல்லாத காரணத்தால் வயிற்றோட்ட நோய்க்கு ஆளாகியிருக்கும் நிலையில், இப்பிரச்சினை மேலும் விஸ்வரூபம் எடுக்கும் சாத்தியம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த மக்களுக்கு வாகனத் தொடரணி மூலம் அனுப்பப்படும் உணவு மற்றும் பொருள்கள் 'யானைப்பசிக்கு சோளப் பொரி' அளவிலேயே இருப்பதால் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள், மருந்து வகைகள் போன்றவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடும் அங்கு நிலவுகின்றது.

ஒருபுறம் விமானக்குண்டுவீச்சு, ஆட்லறி - ஷெல் தாக்குதல்கள் என்று நேரடியாக யுத்தக் கொடூரம். மறுபுறம் உணவு, மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, தங்குமிட வசதியின்மை, எரிபொருள் இன்மை போன்ற கோர நெருக்குவாரங்கள்.

தமது வாழ்வியல் இருப்புக்கான சுதந்திரத்தை ஈழத் தமிழர்கள் சுவீகரித்துக்கொள்ளும் வரை, இந்தக் கொடூரங்களும் தமிழர்களை விட்டகலாத விலங்குகளாக அவர்களைக் கட்டிப்போட்டே இருக்கும்.

## மறைந்திருந்த கொள்ளைக் கோஷ்டி தப்பியது; 'அசிட்' உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டன

கரவெட்டி, ஒக்.17

வதிரி ஓடைப் பகுதியில் மின் தடைப்பட்டிருந்த வேளையில் கொள்ளையில் ஈடுபடும் நோக்கில் பற்றைக்குள் மறைந்திருந்த 'கோஷ்டி' பொதுமக்களால் மடக்கப்பட்டது. அக் கோஷ்டி தப்பியதை அடுத்து 'அசிட்' உட்படப் பல பொருள்கள் அப்பிரதேசத்தில் மீட்கப்பட்டன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றது.

மின் தடைப்பட்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்பவற்றில் வந்தவர்கள் பற்றைக்குள் பதுங்கியிருந்துள்ளனர். அதனை அவதானித்த சிலர் ஏனையவர்களுக்குத் தகவல் கொடுத்துள்ளனர். அதையடுத்து நூற்றுக் கணக்கானோர் சேர்ந்து சுற்றி வளைத்து தேடியுள்ளனர்.

இதனைக் கண்ட கொள்ளைக் கோஷ்டியினர் சிலர் தாம் வந்த மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். சிலர்கால் நடையாகவும்தப்பிஓடினர்.

அப்பகுதியில் பொதுமக்கள் நடத்திய தேடுதலில் சப்பாத்துக்கள், கறுப்பு உடைகள், சைக்கிள், கையடக்கத் தொலை பேசிகள் என்பன வற்றுடன் 'அசிட்' திரவம் நிரம்பிய போத்தலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த விடயமாக நெல்லியடிப் பொலிஸாருக்கும் வதிரிப் பிரதேச இராணுவத்தினருக்கும்தகவல் தெரிவிக்கப்பட்டது.

## சேவைநலன் பாராட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.கல்வி வலயத்தில் நீண்ட காலம் நிர்வாக உத்தியோகத்தராக பணியாற்றி ஓய்வுபெறும் இ.நாகராசாவுக்கு சேவைநலன் பாராட்டு விழா இன்று முற்பகல் 11 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.இரவீந்திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். (1)

## சமயபாடப் பரீட்சை

வடமராட்சி, ஒக்.17

நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை நடத்தும் சமயபாடப் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுட்டிலக்கங்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைச் செயலாளர் கலாநிதி தி.வேல்நம்பி தெரிவித்துள்ளார். (110-204-36)

## யாழ்.பிரதேச செயலக சிறுவர் தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.பிரதேச செயலகம் நடத்தும் சிறுவர் தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச செயலர் மரியதாஸன் ஜெகூ தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம், ஓய்வு பெற்ற நீதிபதி மு.திரு நாவுக்கரசு, கியூடெக் கரிதாஸ் நிறு வன இயக்குநர் வண. பிதா சி.ஜி. ஜெயக்குமார் அடிகளார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (204)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற வலிகாமம் வலய மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

வலிகாமம் கல்விவலயத்தில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 9.30 மணிக்கு தெல்லிபழை மகாஜனக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் த.க.ஆனந்தராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் மா.சந்திரகாந்தன், ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆ.சி.நடராசா ஆகியோர் கலந்து கொள்வர்.

மகாஜனக் கல்லூரி நடத்திய சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (203)

## பரிசளிப்பு விழா நிகழ்வுகள்

வடமராட்சி, ஒக்.17

பருத்தித்துறை சென்.தோமஸ்றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ்.ஜெயநாயகி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ் ராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் ஏ.ஜி.அலெக்ஸ் ராஜா பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (218-236-204)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.17

அருணோதயக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், 'அருணோதயம்' மலர் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அருணாசல உடையார் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், வலி.வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (204)

## பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர், இளைஞர் கழகங்களிடையே நல்லுறவை ஏற்படுத்த நிகழ்வு

தெல்லிப்பழை, ஒக்.17

பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர், இளைஞர் கழகங்களிடையே நல்லுறவை வளர்க்கும் நோக்குடனும் அவர்களின் கலைத்திறனை வெளிக்கொணரவும் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினரால் பின்தங்கிய கிராமங்களை ஒன்றிணைத்து கலைநிகழ்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

வசாவிளான் கிழக்கு சுதந்திரபுரம் கிராமத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

சுதந்திரபுரம் விண்மீன் விளையாட்டுக்கழகத்தின் ஒத்துழைப்புடன் மேற்படி கிராமத்தில் நடைபெற்ற இவ் விழாவில் காக்கைதீவு, நாவாந்துறை, பூவாக்கரை, சுதந்திரபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர், இளைஞர் கழக அங்கத்தவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். சமூகசெயற்பாட்டுமையத்தின் இணைப்பாளர் எஸ்.சுகிர்ததாஸ், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் செல்வி தர்சினி மற்றும் வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் கலியுகவரதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (203-150)

## ஐக்கிய நாணய சங்கப் பவள விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.17

வட்டு.மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கம் நடத்தும் பவள விழா நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு சங்கத் தலைவர் க. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி, கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம், சங்கானைப் பிராந்திய சபைத் தலைவர் வி.செல்வரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி பவளவிழா மலர் வெளியீட்டுரையையும் ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர். (204)

## சுழிபுரம் பிரதேசத்தில் இந்து ஆலயங்களில் படையினர் சோதனை

யாழ்ப்பாணம், ஒக்.17

சுழிபுரம் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களில் கடந்த சில தினங்களாகப் படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆலயத்தில் தேர்த் தரிப்பிட மண்டபங்கள் மற்றும் தேர் என்பவற்றையே தீவிர சோதனைக்கு உட்படுத்துகின்றனர் என கூறப்படுகின்றது. (28-204)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 02 | 18.10.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.இ.06.04வரை |
| நட்சத்திரம் : | ரோகிணி |
| | பி.இ.01.05 வரை |
| சுபநேரம் : | 03.02 - 04.32 |
| இராகுகாலம் : | 09.02 - 10.32 |

## யாழ்.மத்திய கல்லூரி— இலங்கை வங்கி சேமிப்புப் பிரிவின் மாணவ முகாமையாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.மத்திய கல்லூரியில் இயங்கும் இலங்கைவங்கிப் பாடசாலைசேமிப்புப் பிரிவின் மாணவ முகாமையாளர்களாகக் கடமையாற்றிய ஐவர் வங்கியால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கல்லூரி அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந. சிவரட்ணம், அதிமேற்தரக் கிளை பிரதான முகாமையாளர் இ.ஜயேந்திரா, யாழ்ப்பாணக் கிளைபாடசாலைச் சேமிப்புப் பிரிவு இணைப்பாளர் து.கோணேசநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

கல்லூரியின் சேமிப்புப் பிரிவில் மாணவ முகாமையாளர்களாக இலங்கை வங்கிக்குக் கடமையாற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (202)



யாழ்.மத்திய கல்லூரியின் மாணவ முகாமையாளர் ஒருவருக்கு இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் சான்றிதழ் வழங்குகின்றார். நடுவில் சேமிப்புப் பிரிவுப் பொறுப்பாசிரியர் எஸ்.சிவபாதமும் காணப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சிப் பிரதேச செயலகம் நடத்திய சிறுவர், முதியோர் தின விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
தென்மராட்சி கலா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் காணலாம்.
புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலத்தில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற ரி.பாசுபதனுக்கு பிரதேச செயலர் தங்கப் பதக்கம் அணிவிப்பதையும் சிறுவர்களின் கலை நிகழ்வுகளில் ஒரு காட்சியையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: தென்னவன்)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 18 ★ 09 ★ 1962

ஆண்டவன் அடியில் 12 ★ 10 ★ 2003

**அமரர் அப்புக்குட்டி உதயசீலன் (அப்பன்)**

திதி: 17-10-2008 திருதியை

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் (79285)
வாழ்ந்து எமைவிட்டு
பிரிந்து நித்தமும் எம் முன்னே
நிழற்படமாய் காட்சி கொடுக்கிறீர்
உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்

கணேஸ்வரம் அளவெட்டி. குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 11 . 06 . 1942

உதிர்வு 17 . 09 . 2008

**அமரர் குட்டியர் தர்மலிங்கம் (குணம்)**

கண்ணை இமை காப்பதுபோல்
எம்மை எல்லாம் காத்தீரே
காலமெல்லாம் தரணியில் நாம்
வாழ வழி சமைத்தீரே
ஆண்டும் ஒன்றென்ன யுகம் பல
சென்றாலும் அகலாது உங்கள் நினைவு
அவனியில் உம் வாழ்க்கை அழிந்தபோதும்
உம் நினைவே எம் மனதில் என்றுமப்பா.

கடந்த 17.09.2008 புதன்கிழமை அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், எமக்கு உற்ற துணையாக நின்று பல வழிகளிலும் உதவியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (17.10.2008) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தயை கூர்ந்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

கல்திட்டி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## வெளிவாரிப் பரீட்சை ஆரம்பமாகியுள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு நடத்தும் கலை முதல் தேர்வு - 2006 பரீட்சைகள் நேற்று முன்தினம் புதன் கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன என்று வெளிவாரி பரீட்சை பிரிவு அறிவித்துள்ளது. (202)

## இணுவிலில் இன்று ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.17

இணுவில் மத்திய கல்லூரி நடத்தும் ஆசிரியர் தின விழா இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ச.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (204)

## தனியார் பாரவூர்தி கூட்டுறவுச் சங்க கட்டடத் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதியில் அமைந்துள்ள புதிய தலைமைக் காரியாலயத்தில் நடைபெற வுள்ளது.

க.அரிகரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) பொ.சிவலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (எண்பார்வை) எஸ்.கனகசபாபதி, யாழ்.மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்புக் கணக்காளர் ச.குகதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204)

## பக்கவடிமைப்பாளர் தேவை

கணனி பக்கவடிவமைப்பாளர் தேவை அனுபவம் உள்ளவர்கள். நேரில் தொடர்பு கொள்ளவும்.

நேர்முகம்: *18-10-2008 சனி*
*19-10-2008 ஞாயிறு*

*தர்சா தமிழ்ப் பதிப்பகம்,*
*இராசா வீதி, அச்சுவேலி.*

## மரண அறிவித்தல்



**சந்தியாம்பிள்ளை ஸ்ரனிஸ்ஸஸ் அமலதாஸ்**

சென்.ஜேம்ஸ் வீதி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பிராய், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாம்பிள்ளை ஸ்ரனிஸ்ஸஸ் அமலதாஸ் நேற்று (16.10.2008) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டப்பிராய், இருபாலை. தகவல்: தகப்பன்.

## யாழ்ப்பாணப் பெட்டகம் - 1

வர்ணப் புகைப்படக் கண்காட்சி அனேகரது வேண்டுகோளுக்கிணங்க 18 ஆம் திகதி சனிக் கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**கலாசாரப் பேரவை,**
**வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை.**

## நீர்வேலி மேற்கு காலசன் முன்பள்ளி விளையாட்டுவிழா - 2008

காலம்: நாளை(18.10.2008) சனிக்கிழமை
நேரம்: காலை 9.30 - 1.00 மணி
இடம்: முன்பள்ளி முன்றல்

**அன்புடன் அழைக்கின்றோம்**

ஸ்ரீ சுவர்ணா ச.ச. நிலையம்

ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## ஈராண்டுப் பகுதிநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2007/2009
## முழுநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி 2007/2008

**புதிய அனுமதி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள்:

1. ஈராண்டுப் பகுதிநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்காக அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும், கல்வி நிர்வாகிகளிடமிருந்தும்.

2. முழுநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுடமிருந்தும் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 10.11.2008 அன்று 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும். இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்/அனுமதிகள் கிளையில் பணம் கட்டும் பத்திரத்தைப்பெற்று, யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் (காலை 9 மணிக்கும் 1 மணிக்குமிடையில்) ரூபா 100.00 ஐச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 100.00 இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் ரூபா 5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட தபால் உறையினையும் உதவிப் பதிவாளர்/அனுமதிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இக்கற்கைநெறிக்கான கட்டண விவரங்கள்:

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் : | 750.00 |
| கற்கைநெறிக்கட்டணம்: | 10,000.00 |
| நூலக வைப்புக் கட்ணம்: | 500.00 (மீளப்பெறத்தக்கது) |
| நூலகக் கட்டணம்: | 750.00 |
| மொத்தம் : | 12,000.00 |

எழுத்துத் தேர்வு (பொது விவேகம், கல்வியியல் பொதுத் தகைமை எனும் பாடங்கள்) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து, 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கைநெறிக்குப் பதிவு செய்யும்போது மேற்குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 10.11.2008 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்/அனுமதிகள் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் உதவிப் பதிவாளர்/அனுமதிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

15.10.2008 (சி/555473) **பதில்பதிவாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து உரிமை நடவடிக்கைக் குழு மலேஷியாவில் செயற்படத் தடை!

கோலாம்பூர், ஒக். 17

மலேஷியாவில் செயற்பட்டு வரும் இந்து உரிமை நடவடிக்கை குழு (ஹின்ட்ராப்) தடை செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டு பாதுகாப்புக்கு ஹின்ட்ராப் அச்சுறுத்தலாக உள்ளது என்று கூறி இந்தத் தடையை மலேஷிய அரசு விதித்துள்ளது.

இது குறித்து புதன்கிழமை அறிக்கை வெளியிட்டுள்ள மலேஷியாவின் உள்துறை அமைச்சர் சையத் ஹமீது அல்பார், கடந்த ஆண்டு முதல் மலேஷியாவில் சிறுபான்மை இந்துக்களின் உரிமைகளுக்காகப் போராடி வரும் ஹின்ட்ராப் அமைப்பு சட்டவிரோதமானது என்று கூறியுள்ளார்.

ஹின்ட்ராப் தொடங்கப்பட்டது முதல் அதன் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வந்தன. இதன் அடிப்படையில் அமைப்புகளின் பதிவாளர் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மலேஷியாவின் சொசைட்டி சட்டம் 1966 பிரிவு 3 மற்றும் 5 இன் கீழ் ஹின்ட்ராப் சட்ட விரோதமான அமைப்பு என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹின்ட்ராப் அமைப்பு இனப் பிரச்சினையைக் கிளப்பி அரசுக்கு எதிராக செயற்பட்டுள்ளது. மக்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் செயற்பட்டு வந்துள்ளது. அந்த அமைப்பு தொடர்ந்து செயற்பட்டால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும். இதனால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அல்பார் விளக்கியுள்ளார்.

மலேஷியாவில் சிறுபான்மை இந்துக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அவர்கள் பாரபட்சத்துடன் நடத்தப்படுகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டி ஹின்ட்ராப் அமைப்பு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி மலேஷியாவில் பேரணி ஒன்றை நடத்தியது.

இதைத் தொடர்ந்து ஹின்ட்ராப் அமைப்பின் 5 தலைவர்கள் உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஹின்ட்ராப் அமைப்பின் தலைவர் வேதமூர்த்தி தற்போது லண்டனில் தஞ்சமடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கான் மோதலில் 18 தீவிரவாதிகள் பலி

கந்தகார்,ஒக்.17

ஆப்கானிஸ்தானின் ஹெல்மாந் மாகாணத் தலைநகரில்,நேட்டோ படையினருக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கு மிடையே மூண்ட மோதலில் 18 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் என மாகாண பொலிஸ் அதிபர் ஷெர்சாத் தெரிவித்தார்.

தலிபான் தீவிரவாதிகள் செவ்வாய்க்கிழமை இரவு, இங்குள்ள பொலிஸ் சோதனைச்சாவடி மீது தாக்குதல் நடத்தினார்கள். உடனடியாக நேட்டோ படையினர் பதில் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் இத் தீவிரவாதிகள் பலியானார்கள் என்றும் அவர் விவரித்தார்.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் ஒருவரின் சடலம் மட்டுமே நேட்டோ படையினரால் கைப்பற்றப்பட்டது. ஏனையோரின் சடலங்களை தீவிரவாதிகள் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

ஹெல்மாந் மாகாணத்தலைநகரில், தலிபான் தீவிரவாதிகள் ஒருவாரத்துக்குள் இரு தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள். முதல் தாக்குதலின் போது, படையினர் கொடுத்த பதிலடியில் 60 தீவிரவாதிகளும், இரண்டாவது பதில் தாக்குதலில் 18 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் பொலிஸ் அதிபர் விளக்கினார்.

# அல்- குவைதா தளபதி பலி

ஈராக்கின் வட நகரான மொசூலில் மேற்கொள்ளப்பட்ட அதிரடி இராணுவ நடவடிக்கையில், ஈராக்கின் இரண்டாம் நிலை அல்- குவைதா தளபதி கொல்லப்பட்டார் என அமெரிக்க இராணுவம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டாம்நிலைத் தளபதி அபு கஸ்வராஹ் அல்லது அபு சாரா என அழைக்கப்படுபவர் ஆவார். இவர் 2007 ஆம் வருட ஜூனில், வட ஈராக்கில் சிரேஷ்ட தளபதியாக நியமிக்கப்பட்டவர். இவர் ஆப்பானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் உள்ள அல்- குவைதா தலைவர்களுடன் தொடர்பு கொண்டவர் என்றும் அதில் அது விளக்கியுள்ளது.

ஒக்டோபர் 5ஆம் திகதி, மேற்கொள்ளப்பட்ட அதிரடி இராணுவ வேட்டையின் போது, அபுகஸ்வராஹ் கொல்லப்பட்டார். ஈராக்கிலுள்ள அல்- குவைதா போராளிகளுக்கு இவர் இரண்டாம் நிலைத் தளபதியாவார். முதலாம் நிலைத் தளபதியாக அபு அயூப் அல்- மஸ்ரி இருந்து வருகிறார். இவர் அபு ஹம்ஸா அல்- முஹாஜிர் என்றும் அழைக்கப்படுவர் என்றும் அமெரிக்க இராணுவம் குறிப்பிட்டது.




# தற்கொலைத் தாக்குதல் இஸ்லாத்துக்கு விரோதம்

## முஸ்லிம் மதகுருமார் சுட்டிக்காட்டு

லாகூர், ஒக். 17

தற்கொலைத் தாக்குதல்கள் இஸ்லாமிய மத நெறிக்கு எதிரானவை. இவற்றில் பெண்கள், பிள்ளைகள் ஆகியோர் உட்பட அப்பாவிகள் குரூரமாகக் கொல்லப்படுகிறார்கள் என பாகிஸ்தான் முஸ்லிம் மதகுருமார்கள், லாகூர் மாநாட்டில் குறிப்பிட்டார்கள்.

இம்மாநாட்டில் பாகிஸ்தான் முழுவதிலுமிருந்து வந்து, மதகுருமார்கள் கலந்து கொண்டார்கள். புனிதப் போர் என்ற போர்வையில் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கும் இம்மதகுருமார்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

இதுபோன்ற தற்கொலைத் தாக்குதல்களை அரசு தடுத்து நிறுத்தவேண்டும் என முத்தாகிதா உலாமா சபை உறுப்பினர்களான மதகுருமார்கள் கேட்டுக்கொண்டாகள்.

தீவிரவாதத்துக்கு முடிவு கட்டும்பொருட்டு, அதனைப் பின்பற்றும் குழுக்களுடன் பேச்சுகள் நடத்தப்படவேண்டும். அதேவேளை, பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையும் கைவிடப்படவேண்டும் என்றும் மதகுருமார்கள் கேட்டுக்கொண்டார்கள்.

# தலிபான், அல் - குவைதா தீவிரவாதிகள் பாகிஸ்தானைக் கைப்பற்றக் கூட்டுச் சதி

## அந்நாட்டு அமைச்சர் தெரிவிப்பு

பாகிஸ்தானைக் கைப்பற்ற தலிபான் தீவிரவாதிகளும், அல்-குவைதா தீவிரவாதிகளும் கூட்டாக முயற்சி செய்து வருகிறார்கள். சமீபகாலமாக, தலிபான்களின் செல்வாக்கு பாகிஸ்தானில் அதிகரித்து வருகிறது என பாகிஸ்தான் அமைச்சர் ஷெர்ரி ரஹ்மான் குறிப்பிட்டார்.

இஸ்லாமாபாத் பாதுகாப்பு செயலகத்தில் நடைபெற்ற தேசப் பாதுகாப்புக்கான ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார். இதில் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

அமைச்சர் ஷெர்ரி ரஹ்மான் இதில் தொடர்ந்து பேசுகையில், ''தலிபான்கள் பாகிஸ்தான் ஆட்சியைக் கவிழ்க்க முயன்று வருகிறார்கள். இவர்கள் ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகள், காஷ்மீர் தீவிரவாதிகள் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டு வருகிறார்கள்'' என்றும் விவரித்தார்.

ஆப்கானிலிருந்து விரட்டப்பட்ட தலிபான் தீவிரவாதிகளும், அல்-குவைதா தீவிரவாதிகளும் பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்துள்ளார்கள். இவர்கள் எல்லைப் பிராந்திய பழங்குடியின மக்களையும், இளைஞர்களையும் தம் ஆதரவாளர்களாக மாற்றிவருகிறார்கள் என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

# பாகிஸ்தானில் கார்க்குண்டு வெடிப்பு இரு பொலிஸார் பலி; 30 பேர் காயம்

இஸலாமாபாத்,ஒக்.17

பாகிஸ்தானின் வட மேற்கிலுள்ள மிங்கோரா என்னுமிடத்தில், பொலிஸ் நிலையமொன்றின் மீது நேற்று வியாழக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில்,இரு பொலிஸார் கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயமடைந்தனர் என பொலிஸ்துறை உயரதிகாரி ஓமர் தாரிக் தெரிவித்தார்.

இக்கார்க்குண்டுத் தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை. எனினும் தலிபான் தீவிரவாதிகளே இதனை மேற்கொண்டுள்ளனர் என்ற சந்தேகம் வலுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் வட மேற்கு பிராந்தியத்தில், ஊடுருவியுள்ள தலிபான் தீவிரவாதிகளும் அவ்வப்போது இராணுவத்துக்கெதிராகவும் பொலிஸாருக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். தாக்குதல்களில் உள்ளூர் ஆதரவாளர்களையும் ஈடுபடுத்தி வருகிறார்கள் என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

# பங்ளாதேஷில் 4 தீவிரவாதிகள் கைது

பங்ளாதேஷிலுள்ள குல்னா என்னுமிடத்தில், குற்றத்தடுப்பு அதிரடிப் படையினரால் நான்கு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள். இத்தீவிரவாதிகள் ஹர்கத்- உல்-ஜிஹாத் என்னும் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள தங்கள் அமைப்பின் முப்தி அப்துல் ஹன்னனை விடுவிக்க, தாங்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தார்கள் என இவர்கள் இதில் தெரிவித்துள்ளார்கள்.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹஷீனாவின் அவாமிலீக் கட்சி நடத்திய பேரணியில், இந்த அமைப்பினர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதல்களில், 24 பேர் பலியாகியுள்ளனர். எண்பதுக்கு மேற்பட்டோர் காயமுற்றுள்ளனர்.

இத்தாக்குதல்கள் தொடர்பாகவே, முப்தி அப்துல் ஹன்னன் உட்பட 21 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இத்தீவிரவாதத் தலைவரை மீட்க, இந்த அமைப்பினர் திட்டமிட்டுள்ளனர் என கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே தற்போது அதிரடிப்படையினர் இந்நால்வரையும் கைது செய்துள்ளனர்.

ஹர்கத்- உல்- ஜிஹாத் அமைப்பு மீது 2005 ஆம் ஆண்டு, பங்ளாதேஷில் தடைவிதிக்கப்பட்டது.




பிரிட்டனின் தலைநகரான லண்டனிலுள்ள ரோயல் அல்பேர்ட் மண்டபத்தில் நிகழ்ந்து வரும் ஆபிரிக்க ரைஸிங் திருவிழாவில், மசாய் இன மலைவாழ் மக்களைப்போல வேட மணிந்து இக்கலைஞர்கள் நடனமாடி அசத்தினர். ஆபிரிக்காவின் கலாசாரம், சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை எடுத்துரைக்கும் பொருட்டு, ஆண்டுதோறும் இவ்விழா [illegible]

# 'பெப்சி'யின் லாபம் வீழ்ச்சி!

நியூயோர்க்,ஒக்.17

இந்த நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் ஏற்பட்டுள்ள லாப வீழ்ச்சி காரணமாக, 3300 பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர் என 'பெப்சி' குளிர்பானத்தயாரிப்பு நிறுவனம் அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

உலகின் முதல் நிலைக் குளிர் பானத் தயாரிப்பு நிறுவனங்களுள் 'பெப்சிக்கோ' நிறுவனமுமொன்று. இந்நிறுவனத்தின் மூன்றாவது காலாண்டு நிகர இலாபம் முன்னரை விட, 9.5 சதவீதம் வீழ்ச்சியடைந்து விட்டது என்றும் அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பிரிட்டன் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம்

லண்டன்,ஒக்.17

இங்கிலாந்தில் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை, பொருளாதார நெருக்கடி காரணமாக குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக, பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இந்நிதிக்குறைப்பையொட்டி, ஊழியர்களின் வேதனத்தைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேவேளை, நீதியமைச்சகத் துறையில் 10 ஆயிரம் பேர் வேலை இழக்க நேரிடும் என்றும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

இதன் வாயிலாக, 21 ஆயிரம் கோடி ரூபாய் மிச்சமாகும். சிக்கன நடவடிக்கையாக 100 நீதிமன்றங்கள் மூடப்படவுள்ளன. எனினும் இதனை அரச அதிகாரிகள் வெளிப்படையாகத் தெரிவிக்க முன்வரவில்லை என்றும் அப்பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன.

அதேவேளை எந்தவொரு நீதிமன்றமும் மூடப்படமாட்டாது. நீதிமன்றங்களுக்கு ஆதரவான திணைக்களங்கள் மாத்திரமே மூடப்படவுள்ளன என அதிகாரிகள் ஊடகத் துறைக்கு விளக்கமளித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி மக்களுக்கு பல வழிகளில் பயன்தரும்

# வீதிகளைப் புனரமைத்துத்தர எவரும் முன்வரமாட்டார்களா?



தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கைதடி வடக்கின் நவபுரம் கிராமத்தில் இருந்து கிழக்காக மட்டுவில் வடக்கு நோக்கிச் செல்லும் வீதி ஏறத்தாழ 3 கிலோ மீற்றர் தூரமுடையது.

இவ்வீதி பல வருடங்களாக முற்றாக அழிவுற்று மண்பாதையாக உள்ளதையும், தண்ணீர்ப் போக்குகள் அழிவடைந்துள்ளமையை இங்கு பிரசுரமாகும் புகைப் படங்களும் புலப்படுத்தி நிற்கின்றன.

கோடை காலங்களில் மட்டும் இந்த வீதியில் பலத்த சிரமத்துடன் போக்குவரத்துச் செய்யக்கூடிய நிலை உள்ளது. அதுவும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களே அங்கு பயணிக்கமுடியும்.

இந்த வீதியைச் சிறந்த முறையில் சீரமைப்பதன் மூலம் தென்மராட்சியின் ஏனைய பிரதேச மக்கள் கைதடி நவபுரம் வந்து பின்பு கைதடி- நீர்வேலி இணைப்பு வீதியூடாகக் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு வசதியாக போக்குவரத்துச் செய்யமுடியும். இந்த வீதிகள் இரண்டும் யாழ்.- கண்டி வீதியில் வீதித் தடை ஏற்படும் நேரங்களில் மக்கள் போக்குவரத்திற்கான மிகச் சிறந்த மாற்றுப் பாதையாக அமையும்.

யாழ்.கண்டி வீதி நேர்ப்பாதையை விடச் சில கிலோமீற்றர்கள் அதிக தூரம் என்றாலும் மக்களின் அவசர, அவசிய தேவைகளுக்கு இந்த வீதிகள் கைகொடுக்கும்.

மக்கள் பிரச்சினையில் உதயன்

தென்மராட்சிப் பிரதேச சனத்தொகையில் ஏறத்தாழ 75வீதமானோர் யாழ்.- கண்டி வீதியின் வடக்குப் புறமான பிரதேசங்களில் குடியிருக்கின்றனர். கிராமிய விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தவும், நோயாளர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை செல்லவும், அரச, தனியார்துறை ஊழியர்கள் கடமைக்குச் செல்லவும், மக்கள் தமது தேவைகளுக்காகப் பயணம் செய்யவும் இந்த வீதிகள் மிகவும் கைகொடுக்கும். பிரதேச அபிவிருத்திக்கு விரைவான போக்குவரத்துப் பாதைகள்காலத்தின்தேவை என்பது சொல்லித் தேரிய வேண்டிய ஒன்றல்லவே!

## அரச சார்பற்ற நிறுவனங்கள் மனம் வைத்தால் சாதிக்கலாம்

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களே உங்களுக்குப் பணிவான ஒரு வேண்டுகோள்! முற்றாகவே அழிவுற்றுள்ள கைதடி நவபுரம் - மட்டுவில் வீதியைப் புனரமைக்க முன்வாருங்கள்.

காசுக்கானவேலை, உணவுக்கான வேலை ஆகிய முறைகளில் ஏதாவது ஒன்றில் அல்லது இரண்டும் இணைந்த முறையில் இந்த வீதியை நிர்மாணிக்கமுடியும். தங்களது பிரதேச அபிவிருத்தியில் கைதடி கிராம மக்கள் மிகவும் ஆர்வம் உள்ளவர்கள். அர்ப்பணிப்பு, உழைப்பு, சிந்தனை, சேவை மனப்பான்மை மிக்கவர்கள். அண்மையில் மக்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கைதடி - நீர்வேலி இணைப்பு வீதி இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

கைதடி நவபுரம்-மட்டுவில் வீதியை மண்ணினால் அமைப்பதாயினும் சுற்றுச் சூழல் பாதிப்பின்றி மண் பெறக்கூடிய இடங்களும் உள்ளன. இந்த வீதியின் அருகிலுள்ள கிராம மக்களில் பெருமளவு விவசாயத் தொழிலாளர்கள் இருக்கின்றனர்.

இவர்கள் ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் பெருமளவில் பருவ கால வேலையின்மையில் இருப்பது வழக்கம்.

அக்காலத்தில் இந்த வீதிப்பரப்பில் உள்ள தண்ணீர் முழுவதும் வற்றி இருப்பது வழமையானது. ஆதலால் அக்காலத்தில் வீதி நிர்மா ணத் திட்டத்தை முன்னெடுப்பது இலகு வாக இருக்கும்.

உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களே உங்களது 2009ஆம் ஆண்டுக்கான திட்ட முன்மொழிவில் இந்த வீதியைக் கவனத்தில் எடுக்குமாறு வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றோம். கருத் திட்ட அறிக்கை (Project Proposal) தருவதற்கும் தயாராயிருக்கின்றோம். உதவிக் கரம் நீட்டுவீர்களா?



**மருதன், கைதடி**

## முகாமைத்துவத்தில் நவீன அணுகுமுறை கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.17

முகாமைத்துவத்தில் நவீன அணுகு முறை என்ற தலைப்பில் யாழ்.முகாமையாளர்கள் கழகம் கருத்தரங்கொன்றை இன்று அதன் நல்லூரிலுள்ள யுரோவில் மகா நாட்டு மண்டபத்தில் நடத்தவிருக்கின்றது.

இன்று பி.ப. 2.30 மணியிலிருந்து 4.30 மணிவரை நடைபெறும் இக்கருத்தரங்கினை முகாமைத்துவ ஆலோசகர்கள் டேனியல் தம்பிராஜாவும் நிரூபன் முத்தையாவும் இணைந்து நடத்துகிறார்கள்.

தொழில்முனைவோர், முகாமையாளர்கள், விரிவுரையாளர்கள், பணிப்பாளர்கள், ஆலோசனை வழங்குநர்கள், கொள்கை வகுப்போர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்கள் சகலரும் 90 நிமிடங்கள் நடைபெறும் உரையாடலில் கலந்துகொண்டு பயன்பெறலாம். (ப)

## பெயர் வளைவு திரைநீக்கம்

வடமராட்சி, ஒக்.17

பருத்தித்துறை, தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய வாயில் திறப்பு விழாவும், பாடசாலை பெயர் வளைவு திரைநீக்கமும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் கா.இராமஜெயம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிகக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (236-204)



தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் திருமஞ்சத்திற்கான அச்சு வைக்கும் நிகழ்வு ஆலயத்தின் வடக்கு வீதியில் இடம்பெற்றது.

அச்சு வைக்கும் நிகழ்வில் துர்க்கையம்மன் ஆலய பிரதம குரு அகிலேஸ்வ ரக் குருக்கள், பரிபாலன சபைத் தலைவர் ஆறு.திருமுருகன் ஆகியோர் நிற்ப தைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தின் நவநாள் இறுதிநாள் நிகழ்வு கடந்த மாதம் 29ஆம் திகதி நடைபெற்றவேளை திருச்சொரூபம் வீதியுலா வரும்போது எடுக்கப்பட்ட படம்.

## விதியை வெல்ல வழியேது?

ஞானக்கதிர்

இது நடக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். ஆனால் அது நடப்பதில்லை. நாம் "இது நடக்கக் கூடாது" என்று நினைக்கிறோம். ஆனால் அது நடந்து விடுகிறது. இதற்கு எதைக் காரணமாகச் செல்வது? அதைத் தான் "விதி" என்று கூறுகிறார்கள். ஒரு சமயம் வைகுந்தத்தில் நாராயணனும் மகாலட்சுமியும் உயர்ந்த ஆன்மீகத் தத்துவங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பூலோகத்தில் நடப்பதெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தச் சமயத்தில் நமது பூலோகத்தில் பிச்சைக்காரன் ஒருவன் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். சாப்பாடு கிடைத்ததும் அதை எடுத்துக்கொண்டு தனியான ஓர் இடத்துக்குப் போய் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு முன்னால் கடவுளை நினைத்து நாராயணா என்று சொல்லி அந்த உணவை இறைவனுக்கு நிவேதனம் செய்துவிட்டுச் சாப்பிட ஆரம்பித்தான். இதை வைகுந்தத்திலிருந்த மகாலட்சுமி பார்த்தார். உடனே நாராயணனிடம் சொன்னாள்.

"உங்களுடைய பக்தன் தினமும் பிச்சை எடுத்துவரும் உணவை முதலில் உங்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுப் பிறகுதான் சாப்பிடுகிறான். அப்படிப்பட்டவரை வறுமையில் வாட வைத்திருக்கிறீர்கள்.. இது நியாயமா? " என்று கேட்டாள்.

நாராயணன் புன்சிரிப்புடன் இவன் முற்பிறவியில் செல்வந்தனாகத்தான் இருந்தான். அப்படி இருந்தும் இவன் யாருக்கும் எதுவும் கொடுத்துதவவில்லை.

ஏழைகளுக்குத் தான தர்மம் எதையும் செய்யவில்லை. அதனால்தான் இந்தப் பிறவியில் இப்படிக் கஷ்டப்படுகிறான். அது அவனுடைய விதியின் பயன் என்று விளக்கினார். ஆனால், அவர் சொன்னதை மகாலட்சுமி ஏற்றுக்கொள்ளவில்லை.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? விதியாவது ஒன்றாவது. நாம் நினைத்தால் முடியாதது என்றும் ஒன்று இருக்கிறதா? இப்போது நான் அவனுக்குக் கொஞ்சம் செல்வம் கொடுத்து அவனைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்கப்போகிறேன்" என்றாள் மகாலட்சுமி.

"சரி உன் இஷ்டம்! செய்து பார்!" என்றார் நாராயணன். உடனே மகாலட்சுமி பூலோகத்தில் அந்தப் பிச்சைக்காரன் நடந்து வந்து கொண்டிருந்த வழியில் பணமுடிப்பு ஒன்றைப் போட்டாள். வழியில் பணமுடிப்பு இருப்பதைப் பார்த்து அவன் அதை எடுத்துக்கொள்ளட்டும் என்று இலட்சுமிதேவி நினைத்தாள் ஆனால், அவன் பார்வையில் அந்தப் பண முடிப்பு தட் டுப்படவில்லை. அவன் அதைக் கடந்து அப்பால் சென்றதும் பின்னால் வந்த ஒருவனது பார்வையில் அப்பண முடிப்புத் தட்டுப்படவே அவன் மகிழ்ச்சியுடன் அதனை எடுத்துச் சென்றான்.

நடந்ததையெல்லாம் வைகுந்தத்திலிருந்த நாராயணனும் மகாலட்சுமியும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"என்ன நடந்தது பார்த்தாயா! அந்தப் பக்தனைப் பணக்காரனாக்க வேண்டும் என்று துடித்தாயே... உன்னால் முடிந்ததா?" என்று பகவான் கேட்டார்.

அதற்குப் பிறகுதான் மகாலட்சுமியும், "உண்மைதான் பிரபு! விதிப்படிதான் எதுவும் நடக்கும் எனபதை இப்போது நான் ஒப்புக்கொள்கின்றேன் " என்றாள். இந்தக் கதையை அறிவு பூர்வமாக கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம். ஒரு பக்தனை பணக்காரனாக்கவேண்டும் என்று கடவுள் நினைத்தாற் கூட அது முடியாது என்ற ஓர் உண்மை இந்தக் கதையில் அடங்கியிருக்கிறதல்லவா? அப்படியானால் விதி யார் கையில் இருக்கிறது? மனிதனின் கையில்தான் இருக்கிறது.

அவன் நல்ல விதமாக நடந்துகொண்டால் விதியும் அவனுக்கு சாதகமாக இருக்கும் இல்லாவிட்டால் இந்தப் பிச்சைக்காரன் விஷயத்தில் நடந்தது போன்றே கண் முன்னால் இருந்த செல்வத்தைக் கண்டெடுத்து அனுபவிக்க இயலாது விதி கண்ணை மறைத்த கதையாக முடிவிடும்.

நன்றி: ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கந்தையா அணியை எதிர்த்து மோதிய ஸ்கந்தவரோதயா உடுவில் கோட்டச் சம்பியனானது

## இரு அணிகளும் அபாரமாக விளையாடின



வலி.வடக்கு,ஒக்.17

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், 18 வயதுப் பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சம்பியனானது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் தமது முழுத்திறமையையும் வெளிப்படுத்தி அபாரமாக விளையாடின. முதல்பாதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னணி வீரன் ருசாந்தன் தனக்குக் கிடைத்த பந்தொன்றை நகர்த்திச் சென்று அபாரமாக ஒரு கோலைப் போட்டார்.

தொடர்ந்து மேலும் ஒரு கோலை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மற்றுமொரு முன்னணி வீரரான கஜகோபன் போட்டார்.

எனினும் சளைக்காமல் தொடர்ந்து போராடிய தமிழ்க் கந்தையா வித்தியாலயம் தனது முழுப் பலத்தையும் ஆட்டத்தில் வெளிப்படுத்தியது. அந்த அணியின் முன்னணி வீரர் சுபராஜ் தனக்குக் கிடைத்த பந்தை வேகமாக நகர்த்திச் சென்று கோல் கம்பத்தினுள் செலுத்தி முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

முதல்பாதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 2இற்கு1 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் கோல் பெறும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டன. இந்தவேளையில் மீண்டும் ஒரு கோலை ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர் கஜகோபன் அடித்து, தனது அணியின் கோல் எண்ணிக்கையை மூன்றாக உயர்த்திக்கொண்டார்.

தமிழ்க் கந்தையா வித்தியாலய வீரர்கள் தொடர்ந்து போராடி கோல் கம்பத்தை நோக்கி பந்தைக் கொண்டு சென்றபோதிலும் ஸ்கந்தவரோதயவின் பின்னிலை வீரர்கள் அதனைத் தடுத்து நிறுத்தினார்கள்.

ஆட்டம் நிறைவு பெற்றபோது ஸ்கந்தவரோதயக் கல்லூரி 3இற்கு1 என்ற கோல் கணக்கில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தை வென்று உடுவில் கோட்டச் சம்பியனாகியது. (50-86)

## பரிசளிப்பு விழா

வலி.வடக்கு,ஒக்.17

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே மகாஜனக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்குக் கல்லூரி அதிபர் திருமதி எஸ். ஆனந்தசயனன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் மா.சந்திரகாந்தன் கலந்துகொள்வார். (50-86)




## ஏழாலை ஸ்ரீமுருகன் சம்பியன்



உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் சம்பியனாகியது.

வெற்றி பெற்ற அணி வீரர்கள் ஒன்றாக எடுத்துக்கொண்ட படம் இது. *(படம்: நேசன்)*

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.17

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 16, 18 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

16 வயதுப் பிரிவு

* மல்லாகம் மகாவித்தியாலயம் எதிர் வசாவிளான் குட்டியப்புலம் மகா வித்தியாலயம் (மகாஜனக் கல்லூரி மைதானம்).
* வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் (மகாஜனக் கல்லூரி மைதானம்).
* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் மல்லாகம் குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை (அளவெட்டி அருணோதயா மைதானம்).
* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் மயிலிட்டி றோ.க. பாடசாலை (அளவெட்டி அருணோதயா மைதானம்). (50-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஒக்.17

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் 14, 16, 18 வயதுப் பிரிவு அணிகள் கலந்துகொள்ளவுள்ளன. (50-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஒக்.17

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் 14, 16, 18, 20 வயதுப் பிரிவு அணிகள் கலந்துகொள்ளவுள்ளன. (50-86)

★ ★ ★

வேலணை,ஒக்.17

வேலணை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 14, 16, 18 வயதுப்பிரிவு அணிகளின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டம் என்பன இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (50-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஒக்.17

யாழ்.நகர்மைய றோட்டரக்ட் கழகம் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் கூடைபந்தாட்டப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

*பெண்கள் அணி:*

* யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

*ஆண்கள் அணி:*

* யாழ்.இந்துக் கல்லூரி எதிர் சென். ஜோன்ஸ் கல்லூரி. (50-86)

## சாவகச்சேரி இந்து சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.17

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வரணி மகாவித்தியாலய அணியை வென்று சாவகச்சேரி இந்து சம்பியனாகியது.

வரணி மகாவித்தியாலயம் இரண்டாவது இடத்தையும் நாவற்குழி மகா்வித்தியாலயம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. (50-207)

# சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையே நீண்டகாலத்தின் பின் தடகளப் போட்டிகள்

வலி.வடக்கு,ஒக்.17

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு இடையே தடகளப் போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

ஆண்கள், பெண்களுக்கெனத் தனித்தனியே நடைபெற்ற இந்தப் போட்டிகளில் 8, 10, 11 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் பங்குபற்றினார்கள்.

இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வருமாறு:

8 வயதின் கீழ் (ஆண்கள்)

* *50 மீற்றர் ஓட்டம்:* ரவிச்சந்திரன் நிதர்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), த.சஸ்ரன் (நவாலி மகா வித்தியாலயம்), டன்சன் அரன்பேட் டார்வின் (இளவாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை).
* *75 மீற்றர் ஓட்டம்:* ரவிச்சந்திரன் நிதர்சன் (மானிப்பாய் மெமோறியல் பாடசாலை), டன்சன் அரன்பேட் டார்வின் (இளவாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை), ச.அபிஷன் (நவாலி சென். பீற்றர்ஸ் வித்தியாலயம்)
* *பந்து எறிதல்:* தயேந்திரன் கேதுஜன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), யோ.பஸ்ரியன் இராஜ்குமார் (சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை), ஜேசுதாஸ் அலெக்ஸ் றொனிஸ்ரன் (மாதகல் சென்.தோமஸ் வித்தியாலயம்).
* *குறிபார்த்து எறிதல்:* ர.அனோஜன் (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்), தவராசா தர்சிகன் (பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), கா.சர்மிலன் (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்).
* *நீளம் பாய்தல்:* செல்வக்குமார் சாரங்கன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சு. சுதர்சன் (கட்டுடை தமிழ்க் கலவன் பாடசாலை), [illegible] சாரங்கன் (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்).

8 வயதின் கீழ் (பெண்கள்)

* *50 மீற்றர் ஓட்டம்:* ஜெ.மேரி அனற் ஜெனிற்றா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம்), நி.விதுஷன் (மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்), அ.ஜீவிதா (சங்கானை கிழக்குப் பாடசாலை).
* *75 மீற்றர் ஓட்டம்:* ஜெ.மேரி அனற் ஜெனிற்றா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம்), நி.விதுஷன் (மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்), அ.ஜீவிதா (சங்கானை கிழக்கு பாடசாலை).
* *பந்து எறிதல்:* சசிகரன் சுசி (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), ரவிச்சந்திரன் நிருபனா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சா.சதுர்சிகா (மானிப்பாய் விவேகாணந்தா வித்தியாலயம்).
* *குறிபார்த்து எறிதல்:* லோகேந்திரம் மங்கையர்க்கரசி (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), சூசைப்பிள்ளை மேரி றொஷாந்தினி (பெரியவிளான் றோ.க. பாடசாலை), ச.நிருபனா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).
* *நீளம் பாய்தல்:* நி.விதுஷனா (மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்), ரவீந்திரன் யதுர்சனா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அ.புளோரன்ஸ் (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்). (50-86)

*(தொடரும்)*

# உள்ளூராட்சிச் சபைகளுக்கிடையே மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## மாநகர சபை விளையாட்டுக் கழகம் நடத்துகிறது

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளிடையே மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை யாழ்.மாநகர சபை விளையாட்டுக் கழகம் நடத்தவுள்ளது.

11 பேர் பங்குபற்றும் இந்தச் சுற்றுப் போட்டி 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக அமையவுள்ளது. சனி, ஞாயிறு மற்றும் பொதுவிடுமுறை தினங்களில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்தப் போட்டியை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்கேற்க விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் செயலாளர், யாழ்.மாநகர சபை விளையாட்டுக் கழகம், மாநகர சபை அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுப்போட்டி தொடர்பான மேலதிக விவரங்களை 222 2335 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம் எடுத்துக் கூறும் நற் போதனைகளை எதிர்கால சந்ததியினர் கடைப்பிடிக்கத் தூண்ட வேண்டும்

## யாழ்.அரச அதிபர் கூறுகின்றார்



மந்திகை, ஒக்.17

சமய வாழ்க்கை மனிதனின் ஈடேற்றத்திற்கு வழி வகுக்கும். இந்துக்கள் இந்து சமய வாழ்க்கை வாழ வேண்டும். இந்து சமயம் காட்டும் வழிகள், போதனைகளை எமது எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துக் கூறவேண்டும். அவற்றை அவர்கள் கடைப் பிடிக்கத் தூண்ட வேண்டும்.

மேற்கண்டவாறு, கரவெட்டிப் பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபையின் 'சிவநெறி' நூல் வெளியீட்டு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்து உரை யாற்றிய யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பத்தில் விருந்தினர்கள் முருகன் ஆலயத்திலிருந்து மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண்டபத்தில் சைவ ஆலோசனைச் சபைத் தலைவர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் விழா நடைபெற்றது.

சிவநெறியின் முதற்பிரதியை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரச அதிபர் கே.கணேஷிடமிருந்து வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அரச அதிபர் கே.கணேஷ் குறிப்பிட்டவை வருமாறு:

எதிர்காலத்தில் எழுச்சி மிக்க தலை சிறந்த சமுதாயம் உருவாக வேண்டும். இதற்கு மனிதர்களாகப் பிறந்த நாங்கள் சமயத் தொண்டோடு, சமூகத் தொண்டுகளையும் ஆற்ற வேண்டும். இந்து சமயத்தின் தனிப் பெருஞ் சிறப்புகளை எதிர்காலச் சந்ததியினருக்குப் போதிக்க வேண்டும்.

மனித வாழ்க்கையில் சமயத்தொண்டு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. சமய வாழ்க்கையின் இலக்குகளை நாம் அடைய வேண்டும். இன்றைய இளம் சந்ததியினரின் மத்தியில் சமய வாழ்க்கையின் மகத்துவம் உணர்த்தப்பட வேண்டும். ஒவ்வொரு சிறுவனும் ஆலயத் தொண்டாற்ற வேண்டும். இதற்கு வழிவகுக்க வேண்டிய பொறுப்பு எங்கள் அனைவரிடமும் உண்டு. உள்ளத்தில் இறைவனை இருத்தினால் வாழ்க்கையில் ஒளி வீசும்.

### சமயச் சடங்குகள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றன

சமயம் வளர்க்கப்பட வேண்டும். இதற்குச் சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் முன்னின்று செயற்பட வேண்டும். இப் பிரதேசம் சைவ மணம் கமழும் பிரதேசம். 'சிவநெறி' நூல் அன்பே சிவம்என்பதை உணர்த்தி, உண்மையான சைவர்களாக, நடமாடும் தெய்வங்களாக, இன்சொல் பேசுபவர்களாக, ஒவ்வொரு சடங்கினதும் உள் பொருள் உணர்ந்து உள்ளத்தால் ஒன்றி வாழ்வாங்கு வாழ நமக்கு வழி காட்டி நிற்பது சிறப்பம்சமாகும். இப்பிரதேச மக்களின் கூட்டான செயற்பாடுகள் எதிர்கால இலட்சியங்களைச் சிறப்பாக அடைய வழி வகுக்கும். இச்சைவ ஆலோசனைச் சபை வளர்ச்சியடைந்து இன்னும் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இறையருள் கிடைக்க வேண்டும். கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் பல்வேறு முயற்சிகள் பாராட்டப்பட வேண்டும். ஏனைய பிரதேச செயலகங்களுக்கு முன்மாதிரி யான செயலகமாக இது விளங்குவது மிக மகிழ்ச்சிக்குரியதாகும் - என்றார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் வெளியீட்டுரை நிகழ்த்தினார். யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி இளைப்பாறிய அரச அதிபரும் மீள் எழுச்சித்திட்ட பணிப்பாளருமான எஸ்.விஸ்வலிங்கம், பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோரும் உரையாற்றினர். வல்லை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் ஏற்புரை நிகழ்த்தினார். (202-70-218)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

சதாசிவம் இந்திராதேவி

மலர்வு: 12-02-1942
உதிர்வு: 19-09-2008



அன்புடனும் பாசத்துடனும் எம்மை அணைத்து வளர்த்த தெய்வமே!
இன்பமெல்லாம் நிறைவாக இணைந்து நின்ற பாச நிலவே!
உங்கள் நினைவால் எம் கண்களை ஏன் குளமாய் மாற்றிவிட்டீர்கள்?
நாம் கண்ணீரில் நனைகின்றோம் - உம் நினைவால் உருகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நாளை மறுதினம் (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலட்டி, கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(சி/566488) குடும்பத்தினர்.


## நியமனம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மீள் நியமன அடிப்படையில் ஆண் தாதிய உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி இளைப்பாறிய செல்லையா வைரவநாதன் என்பவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-207)

## நீரிழிவுக் கருத்தரங்கு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி - கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு நீரிழிவு நோய் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கினை நடத்தி வருகின்றனர்.

இத் திட்டத்தின் முதலாவது கருத்தரங்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கழகத் தலைவர் லயன் வி.வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கருத்துரைகளை வழங்கினர். (203-207)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
22 * 05 * 1931

மறைவு
17 * 09 * 2008

அமரர் நாகமுத்து கணபதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற பிரதி நில அளவைநாயகம்)

தாயுமாக எமை வளர்த்த தந்தை
ஆசை முத்தும் அள்ளித் தந்த தாத்தா
பண்பாய்ப் பரிவு காட்டிய மாமா
வாழ்வுயர வழிகாட்டிய பெரியப்பா
ஐவர் எம் வாழ்வில் முன்னின்ற பெரியண்ணா
அவனியிலே உங்களைப் போல்
இனி யாருண்டு எமக்கு?
உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று வெள்ளிக்கிழமை (17.10.2008) காலை 9.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.

மக்கள்: யசோதா, கிருபா, ஜெயசீலன்,
மருமக்கள்: நாகராஜா, ஜவகேஸ்வரன், தர்சிகாதேவி,
பேரப்பிள்ளைகள்: நிதர்ஷிவி, நிதர்ஷனி.

(79355)


## சபாபதிப்பிள்ளை வீதி திருத்தும் பணி ஆரம்பம்



மருதனார் மடத்தில் அமைந்துள்ள சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகம் றோட்டறக் கழகத்தினால் புனரமைப்புச் செய்யப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

வலி.வடக்கு, ஒக்.17

சுன்னாகம் றோட்டறக்கழகத்தினால் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதி. திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதி பழுதடைந்து மழைகாலத்தில் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு குன்றும் குழியுமாகக் காணப் பட்டது.

இந்த வீதி சுன்னாகம் றோட்டறக் கழகத்தினால் திருத்தம் செய்யப்பட்டு மக்கள் சிரமம் இன்றி போக்குவரத்து செய்வதற்கு ஏற்றவாறு புனரமைக்கப்பட்டு வருகின்றது. (203-86)


## ஏல விற்பனை அறிவித்தல்

தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 30.09.2007 வரை அடகு வைத்து 30.09.2008 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏல விற்பனைத் திகதி 15.11.2008 சனிக்கிழமை காலை 8.30 மணி.

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
| --- | --- |
| யாழ்ப்பாணம்<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி | யாழ்ப்பாணக்கிளை,<br>இல.496, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 222 2696 |

ஏல விற்பனை இரத்துச் செய்யும்/ ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

NSB

உதவிப்பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு- 03.



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
17 . 07 . 1977

உதிர்வு
17 . 10 . 2006

அமரர் ஆறுமுகம் மகேஸ்வரன் (அருண்)
(அருண் ஹாட்வெயர் உரிமையாளர்)

அன்பின் உறைவிடமே! குடும்பத்தின் ஒளிவிளக்கே!
கண்ணீரில் கரைந்தன இரு ஆண்டுகள்
கூடி வாழ்ந்த நாள்களை எண்ணிக் கண்ணீரை எமக்கு
தானமெனத் தரவைத்துத் தவிக்கவிட்டுச் சென்றீர்கள்
இரு ஆண்டுகள் என்ன ஒரு யுகமானாலும்
நாங்கள் உங்களை மறவோம்.

அருண் ஹாட்வெயர்,
அறிவாலயம்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(79269)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரசாலை வடக்கு நித்திலா மகளிர் ஐக்கிய நாணய சங்கத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் உரை நிகழ்த்துவதையும் மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், சங்கத் தலைவி திருமதி க.ஞானச்சந்திரன், உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
விழாவுக்கு வருகை தந்திருந்தோரின் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்:தென்னவன்)

# நாளைய தலைவர்களின் இன்றைய நிலை என்ன?

யாழ்.குடாநாட்டில் தொடரும் யுத்த நெருக்குவாரங்கள் மாணவர்களிடையே கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. அந்த வகையில் விசேட தேவைகள் உள்ளோர் என அடையாளப்படுத் தப்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாணவர்கள் எண்



ணிக்கையும் சொல்லிக் கொள்ளத்தக்க அளவில் அதிகரித்து வருகின்றது. இவ்வாறான மாணவர்களுக்கும் சமமான கல்வியறிவை வழங்க கல்வி அமைச்சு பல்வேறு தரப்புகளின் உதவியுடன் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

விசேட தேவைகள் உள்ள சிறார்களுக்கும், ஏனைய மாணவர்கள் போன்றே கல்வி கற்பதற்கான வசதி வாய்ப்புக்களை உருவாக்கி வழங்குவதே எமது நோக்கம் என்கின்றார் யாழ்.வலய கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் செல்வி சந்திரிகா. இவர் விசேட தேவைகளுக்குள்ளான மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டிற்காக ஆர்வத்துடன் செயற்பட்டு வருபவர். எதிர்வரும் டிசெம்பர் 3ஆம் திகதி சர்வதேச அங்கவீனர் தினமாகும். அதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியொன்றை யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளரது அனுசரணையுடன் வட மாகாணக் கல்வி அமைச்சு நடத்தி முடித்துள்ளது. விசேட தேவைகளையுடையவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான மாணவர்கள் இதில் பங்கெடுத்திருந்தனர்.

இதனிடையே விசேட தேவைகளுக்குள்ளான மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாட்டினில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிப்பட்டறைகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. 'நிக்கொட்' எனப்படும் வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் மாகாணக்கல்வி அமைச்சுடன் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதேவேளை விசேட கல்வி வள நிலையமொன்றை நிறுவுவதற்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதற்கான நிதி உதவியை அரசிடம் உரிய தரப்புகள் கோரியுள்ளன. குறித்த கல்வி வள நிலையம் நிறுவப்படுமிடத்து ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்கி விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வித் தரத்தை மேம்படுத்தமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக புதிதாகக் கட்டப்படும் வகுப்பறைகளது நிர்மாணத்தில் விசேட தேவைகளுடைய சிறார்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி வழங்கப்பட வேண்டுமென யாழ்.மாவட்ட விழிப்புலன் வலுவற்றோர் சங்கம் கோரியுள்ளது. எதிர்வரும் காலங்களில் கட்டட நிர்மாண வேலைகளுக்குத் திட்டமிடுகையில் இதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமென அது வலியுறுத்துகின்றது. எனினும் யாழ்ப்பாணத்தில் அவ்வாறான வசதிகள் ஏற்படுத்தப்பட்ட கட்டடங்கள் எதுவுமில்லை என்கின்றன யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள்.

எனினும் விசேட தேவைகள் உடைய மாணவர்கள் உட்பட எந்தவொரு மாணவனுமே இடை நடுவில் கற்றல் செயற்பாடுகளில் இருந்து விலகிக்கொள்வதை ஏற்க எந்தத் தரப்புகளுமே தயாராக இல்லை. மாணவர்கள் தொடர்ந்தும் பாடசாலைகளுடன் இணைந்திருக்க உரிய ஏற்பாடுகளை செய்து வழங்க கல்வி அமைச்சு உத்தரவுகளைப் பிறப்பித்துக்கொண்டேயிருக்கின்றது. எனினும் குடும்பங்களில் தொழில் இழப்புகளினால் ஏற்பட்டுள்ள வருமான இழப்பு கல்வி கற்கும் வயதிலுள்ள சிறார்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியே வருகின்றது. தொடரும் யுத்தம், மிதிவெடி பாதிப்பு மற்றும் இயற்கை அனர்த்தம் ஆகியன விசேட தேவையுடைய சிறார்களது எண்ணிக்கையை அதிகரிக்கரித்துக் கொண்டிருக்கின்றன.

இந்நாட்டின் நாளைய தலைவர்களான இவர்களை அரவணைக்க வேண்டியது அனைவரது கடமையல்லவா?

நன்றி: மீண்டும் வாழ்வோம்(Inter News)

# தமிழக கட்சிகள் எடுத்துள்ள தீர்மானம் ஈழப் போராட்டத்தில் முக்கிய திருப்பம்

## அரியநேத்திரன் எம்.பி. நன்றி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.17

தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் கூடி எடுத்திருக்கின்ற தீர்மானங்கள் ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் முக்கிய மானதொரு திருப்புமுனையாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரிய நேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டு அனைத்து அரசியல் கட்சி கள் ஒன்றிணைந்து எடுத்த தீர்மானம் தொடர்பாகவும், அனைத்து இந்திய மாணவர் பெருமன்றத்தினால் ஈழத்தமிழினத்திற்கு ஆதரவாக நடத்தப்பட்ட பகிஷ்கரிப்புத் தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரிய நேத்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் நாட்டில் வாழும் ஏழு கோடி தமிழர்களின் உணர்வுகளால் பின்னிப் பிணைக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும்தமிழ் நாட்டின் முதலமைச்சர் மு.கருணாநிதியின் தலைமையில் ஒற்று மையாய் எடுத்திருக்கும் ஆறு தீர்மானங்களும் ஈழப்போராட்ட வரலாற்றில் மிகவும் பெறுமதியும், முக்கியத்துவமும் வாய்ந்தவையாகும்.

முக்கியமாக இரண்டு வார காலக்கெடு கொடுத்து, அதற்கிடையில் போர்நிறுத்தம் மேற்கொண்டு, இன அழிப்புப் போரை ஸ்ரீலங்கா அரசு நிறுத்தும்படி பாரத அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும், அவ்வாறு இரண்டு வாரங்களுக்குள் போர் நிறுத்தப்படாவிட்டால் நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்வார்கள் எனக் கூறி இருப்பது வரவேற்கத்தக்கது.

இதேவேளை அனைத்து இந்திய மாணவர் பெருமன்றம் எமதினத்திற்கு ஆதரவாக மேற்கொண்ட மாபெரும் மாணவர் பகிஷ் கரிப்புப் போராட்டம் வரலாற்று முக் கியமானது.

ஒட்டுமொத்தமாக எமது ஈழத்தமிழர்களுக்காக எந்த வேறுபாடின்றியும் இனப் பற்றுடனும், மொழிப்பற்றுடனும், மண் பற்றுடனும் தொடர்ந்து உழைக்கும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், அனைத்து இந்திய மாணவர் பெருமன்றத்தின் மாணவச் செல்வங்களுக்கும் மென்மேலும் நன்றியறிதலைத் தெரிவிக்கும் அதேவேளை, தொடர்ந்தும் உங்களின் எழுச்சிகள் ஈழத்தமிழினத்தின் இலட்சியக் கனவை நனவாக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

சர்வதேச சமூகமும் இதனை புரிந்து ஆக்கபூர்வமான நடவடிக்கையினை உடன் மேற்கொள்ள வேண்டும் - என்று அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-சி)

## மூன்று குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள்

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மூன்று குடும்பங்களுக்குப் பிரதேச செயலகத்தில் தையல் இந்திரங்கள் வழங்கப்பட்டன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமாகிய கே.என். டக்ளஸ் தேவானந்தா இந்த வருட பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட் டில் கொள்வனவு செய்யப்பட்ட தையல் இயந் திரங்களே இவ்வாறு வழங்கப்பட்டன.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த மோகனகுமார் சுதாஜினி, கல்வயலைச் சேர்ந்த பத்ம நாதன் கஜீவா, கெற்பேலி மேற்கைச் சேர்ந்த பஞ்சாட்சரம் வனிதா ஆகியோருக்கே தையல் இந்திரங்கள் வழங்கப்பட்டன. (203-207)

# "புத்தகக்குண்டு" தொடர்பாக கைதானவர் தீவிர விசாரணையில்

கொழும்பு, ஒக்.17

பண்டாரவளையில் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட புத்தகக் குண்டு, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை இலக்கு வைக்கும் வகையில் பயன்படுத் தப்படவிருந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டிருக்கும் பண்டாரவளைப் பகுதியின் தமிழாசிரியர் ஒருவரும், தமிழ் யுவதி ஒருவரும் பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் தீவிரவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பதுளை உல்லாச விடுதியொன்றில் கடந்த 12ஆம் திகதியில் தங்கியிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் யுவதியொ ருவர், பயங்கரவாதத் தடுப்புப் புலனாய் வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். அன்றைய தினமே பண்டாரவளை பிரபல கல்லூரியொன்றில் தமிழாசிரியராகக் கடமையாற்றி வரும் யாழ். மானிப்பாயைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். இவ்விருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் ஆசிரியரின் வீட் டிலிருந்த புத்தகம் ஒன்றை வெட்டி அதற் குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண் டைப் பொலிஸார் கண்டுபிடித்து மீட்டனர்.

இக்குண்டு சீ 4 ரக வெடிபொருள்களினால் தயாரிக்கப்பட்ட 65 மில்லிகிராம் எடையில் புத்தக மொன்றிற்குள் வடிவமைக் கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித் தனர்.இது சம்பந்தமாக தியத்தலாவை குண்டு செயலிழக்கும் இராணுவப் பிரிவுக் குத் தகவல் கூறப்பட்டது. இராணுவப் பிரி வினர் விரைந்து வந்து புத்தகக் குண்டை செயலிழக்கச் செய் தனர்.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை இலக்குவைத்தே இக்குண்டு தயார்படுத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் தீவிர புலன் விசாரணைகளுக் குட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் இவர்களின் பின்னணி குறித்த தகவல்களையும் பொலிஸார் சேகரித்து வருகின்றனர். (சி)

## வாசகர் திருமுகம்

### மாணவர் நலன்கருதி வங்கிகள் கல்விக்கடன் வழங்க முன்வரவேண்டும்

அண்மையில் இந்திய தொலைக்காட்சிகளில் , நடுத்தர வர்க்கத்தில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்திய விளம்பரமொன்றை பார்த்திருப்பீர்கள். இளைஞரொருவருக்கும் குடும் பத்தினருக்கும், அவ்விளைஞனின் மேற்படிப்புக்கு தேவையான பணம்பற்றி சச்சரவு படுவதும், இறுதியில் வங்கியில் வேலை பார்க்கும் அவர்களின் குடும்ப நண்பர் கல் விக்கடன் வழங்கி உதவுவதும் போன்ற பாணியில் அவ்விளம்பரம் வடிவமைக்கப்பட்டிருந்தது. Bank of India இன் இந்த விளம்பரமே கோடிக்கணக்கான மக்களுக்கு கல்விக் கடன் பற்றிய முக்கியத்துவத்தை உணர்த்தியிருக்கும்.

இங்கு இன்னும் அறியப்படாதிருக்கும் கல்விக்கடன் என்ற எண்ணக்கருவால் நடுத் தர வர்க்க பல்கலைக்கழக மாணவர்கள் நன்மையடைய வேண்டும் என்பதே எனது குறிக்கோள். கல்விக்கடன் என்றால் என்ன? கல்வி கற்கும் காலங்களில் மாணவர்களின் கல்வி சம்பந்தப்பட்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கடனாகப் பெற்று பயன்படுத்தப்படும் பணம். நடுத்தர மற்றும் அதற்கு கீழ் நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் மாணவர்கள் கற்கும் காலங்களில் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. மகாபொல புலமைப்பரிசில் ஏனைய உதவித்தொகை மூலம் கிடைக்கும் பணம் முழுமையான கற்றல் நடவடிக்கைகளுக்கு போதுமானதாக இல்லை. இவ்வாறான பிரச்சினைகள் காரணமாக நடுத்தர வர்க்க மாண வர்கள் உயர்தரம் முடித்த பின்னர் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும், வேலையொன்றைப் பெறுவதிலேயே ஆர்வம்காட்டி வருகின்றனர். இந்நிலை மாற்றமடைய வேண்டும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கல்விக்கடன் மாணவர்களுக்கு பெருங்கொடையாக இருக்கும். எனவே கல்விக்கடன் வழங்கும் திட்டங்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழக கல்விக்கு கிட்டத்தட்ட 4 வருடங்கள் தேவைப்படும். இதை அடிப்படையாகக்கொண்டு நீண்டகால (3-4 வருடம்) கல்விக்கடன்கள் வழங்கப்படலாம். வட்டியற்ற,மிக மிக குறைந்த வட்டி வீதத்தில், கட்டுப்பாடுகள், விதிமுறைகளை குறைத்து மாணவர்கள் இலகுவாக கல்விக்கடன் பெற வழி செய்யப்பட வேண்டும்.

புவி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்தியத் திணைக்களத்தில் வைத்து பயனாளிகளுக்கு மானிய அடிப்படையில் நல்லினக் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட நல்லினக் கோழிக்குஞ்சுகளை முதலாவது படத்தில் காணலாம்.

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அமிர்தலிங்கம், வைத்திய அதிகாரி சி.வசிகரன் ஆகியோர் பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்குவதை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: கர்ணன்)*

# மாணவர்களின் அறிவுத்தேடல்களுக்கு நூலகங்கள் முக்கியத்துவமாகின்றன

## இளைப்பாறிய பிரதி அதிபர் கருத்து

மந்திகை,ஒக்.17

மாணவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் அறிவைத் தேடுவதில் மிக அக்கறையுடன் ஈடுபட வேண்டும். இதற்கு மாணவர்களுக்கு நூலகங்கள் மிக முக்கியத்துவமாகின்றன. இதனைக் கருத்திற் கொண்டே இன்றைய கல்வித் திட்டத்தில் நூலக அபிவிருத்திக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு, இளைப்பாறிய பிரதி அதிபர் எஸ்.கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

அல்வாய் சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதிய நூலக திறப்பு விழாவிலே விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விழாவிற்கு கல்வி சமூக மேம்பாட்டு நிதிய இயக்குனர் எஸ்.சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் நூலகத்தை சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதி அதிபர் கணபதிப்பிள்ளை மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

நூலகங்கள் சமுதாயத்தின் அறிவு, ஆற்றல்களை மேம்படுத்துவதில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஏழைகளின் பல்கலைக்கழகங்களாக நூலகங்களே செயற்படுகின்றன. நூலகங்களில் உள்ள நூல்கள் உலக அறிவுக் களஞ்சியமாகப் பரவியிருக்கின்றன.

சமூகத்தின் தகவல் தேவைகளுக்காக இயங்கி வந்துள்ள நூலகங்கள் இன்று விரிவடைந்துள்ளன. முற்காலங்களை விட இன்று நூலகங்கள் பன்மடங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளன.

இன்றைய மாணவர்களின் தேவை கருதி இச்சமூக மேம்பாட்டுநிதியம் இந்நூலகத்தைத் திறந்துள்ளது. மாணவர்கள் நூலகங்களைப் பயன்படுத்தும் பழக்கங்களை ஏற்படுத்த வேண்டும். அது அவர்களின் வாழ்க்கையின் உயர்ச்சிக்கு வழிவகுக்கும். இங்குள்ள மாணவர்கள் இந்நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளமை மிக மகிழ்ச்சிக்குரியதாகும். இங்குள்ள நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்தி எதிர்காலத்தில் அறிவு, ஆற்றல்களை மேம்படுத்தி நீங்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். இந்நூலகம் அபிவிருத்தியடைந்து சமூகத்தின் இலட்சியத்தில் வெற்றியடைய வேண்டும்- என்றார்.

(202-218)


## காணவில்லை

மண்நிறம், கழுத்தில் வெள்ளை வளையம், தலையின் பின்பகுதியில் காயப்பட்ட அடையாளம், நீலக்கயிறு கன்னிப்பசு (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை ஆனைக்கோட்டை யாவில் வயல் காணியில் கட்டப்பட்டிருந்தது. அதனைக் காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- கி.அன்ரனிதாஸ் (அன்ரன்)
கூழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
T.P. 021 222 7722

(79270)



## யா/இணுவில் மத்திய கல்லூரி
## ஆசிரியர் தின விழா - 2008

காலம் : இன்று 17.10.2008 வெள்ளிக்கிழமை மு.ப.9.30 மணி
இடம் : கல்லூரி ஆரம்ப பிரிவு மண்டபம்
தலைவர் : திரு.ச.சந்திரகுமார் (பா.அ.ச.செயலாளர்)
பிரதம விருந்தினர்: உயர்திரு எஸ்.கே.யோகநாதன்
(பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி)
சிறப்பு விருந்தினர்: திரு.செ.குபேரநாதன் அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில்).
கௌரவ விருந்தினர்கள்: டாக்டர் மு.பஞ்சலிங்கம் அவர்கள்
டாக்டர் க.பாலசுப்பிரமணியம் அவர்கள்
திருமதி த.மாலிங்கம் அவர்கள்
(முன்னாள் ஆசிரியை)

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம் மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றார், ஆசிரியர்கள்.

(79274)



## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் சுந்தரம் சங்கரலிங்கம்



தோற்றம்: 17.07.1935
மறைவு : 28.10.2007
திதி: திருதியை

அன்புள்ள அப்பாவே!
ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம் துயர்
அறிவு பல எமக்கூட்டி எம்மை ஆளாக்கி வைத்த
அன்புத் தெய்வத்தின் நினைவலைகள்
அணையாத தீபமாய் எங்கள் இதயத்தில்
என்றும் நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தலங்காவற் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

(சி/555465)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக்.17

நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் கேதாரகௌரி உற்சவம் இலட்சார்ச்சனையாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 27ஆம் திகதி தீபாவளித் தினத்தன்று விஷேட பூசை இடம் பெற்று இந்த உற்சவம் நிறைவடையும்.

மறுநாள் விஷேட பூசை இடம் பெற்று சுவாமி வீதி வலம் வந்த பின் கௌரிக் காப்பு நூல் வழங்கலும் இடம் பெறும்.

(204)

* * *

நீர்வேலி,ஒக்.17

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் ஐப்பசி முதல் வெள்ளியை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை விசேட அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

அன்றையதினம் மாலையில் கார்த்திகை உற்சவம் இடம்பெறவுள்ளது.

(201-224)


## தவறிவிட்டது

8 1/3, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியும் சின்னப்பு பேபினோனா பெயரையுமுடைய தேசிய அடையாள அட்டை (346643498V), விசேட அடையாள அட்டை ஆகியன அடங்கிய கைப்பை கடந்த திங்கட்கிழமை சின்னக்கடைக்கும் சுண்டுக்குளிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டையை குறிப்பிட்ட விலாசத்திற்கு தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



## விற்பனைக்கு

எமது மருந்துக் கடையில் அபிஷேகப் பொருள்கள் மற்றும் சுத்தமான பசுநெய், தேன், தினை, தினை அரிசி, தினைமா போன்றவற்றினைப் பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன்
திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும்
கந்தசுவாமி கோயிலடி, நீர்வேலி.

(79262)



## தங்கம் ரூ.24000 ஆனால் தங்கமெடலோ ரூ.300....!



ஆச்சரியமா...?
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச் செல்வங்களுக்கு ஓர் தங்கமெடல் கொடுத்து கல்வியினை வளர்க்க ஊக்குவியுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:

எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
212, கோயில் வீதி, நல்லூர்.
021 222 9607, 0777-110610

(சி/555462)



## கண்ணீர் அஞ்சலி



வலி.கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் தங்கராசா சுவீந்திரதாஸ் அவர்களின் அன்புத் தாய்

தங்கராசா இராசம்மா

அவர்கள் 16.10.2008 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் மீளாத்துயிலினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வலி-கிழக்கு, வட பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
அச்சுவேலி.

(சி/555468)



## மரண அறிவித்தல்

வே.விநாயகமூர்த்தி (B.Sc.,Dip.in.Edu.M.Ed.)



அல்வாய், திக்கத்தைச் சேர்ந்தவரும் ஆழியவளை C.C.T.M.S. யா/ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியரும் அல்வாய் வடக்கு R.C.T.M.S. பாடசாலையின் அதிபருமான வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி 14.10.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஞானச்செல்வியின் (ஆசிரியை, அல்வாய் வடக்கு, R.C.T.M.S.) அன்புக் கணவரும் சனந்தன், சிவோத்தமபூசணி, வித்தியபூசணி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர்களான வேலுப்பிள்ளை - நாகபூசணியம்மா தம்பதியரின் கனிஷ்ட மகனும் திருமதி இந்திராணி சிறீரங்கன் (பிரதி அதிபர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), அமரர் ஜீவராணி வேலுப்பிள்ளை ஆகியோரின் தம்பியும் கந்தஞானியார் (ஓய்வுபெற்ற உப தபாலதிபர்), தங்கம் கந்தஞானியார் (ஓய்வுபெற்ற ஆசிரியை), தம்பதியரின் மருமகனும் தங்கராசா J.P (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), கணேசம்மா தம்பதியரின் பெறாமகனும் திருமதி சுமதி இளங்கோ ஞானியாரின் (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), உடன் பிறவாச் சகோதரனும் சிறீரங்கன், பஞ்சாட்சரஞானியார் (கனடா), இளங்கோஞானியார் (வைத்திய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), திருமதி ஞானசுகந்தி செல்வராஜன், நடராசா சிவபால தர்மகுலசிங்கம் (ஓய்வுபெற்ற செயலாளர், நகரசபை, பருத்தித்துறை), நடராசா சிதம்பரநடராசா (சுவிஸ்), திருமதி பிரபா ஜெயசங்கர், திருமதி திவாஹரி சுதர்சன், திருமதி றஜிதாஹரி நரேந்திரன், வை.இந்துஜன் ஆகியோரின் மைத்துனரும் செல்வலக்சுமி, சுவலக்சுமி, சௌமியலக்சுமி ஆகியோரின் சிறிய தந்தையும் ஞானலக்சுமி, ஞானலாஹரி, ஞானலாவணி, ஞானமதூரி, கதிர்ஞானியார் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அல்வாய் மேற்கு, திக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திக்கம், இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கராசா (சிறியதந்தை),
Dr. இளங்கோஞானியார் (மைத்துனர்),
க.சிறீரங்கன் (மைத்துனர்).

திக்கம்,
அல்வாய்.

(சி/555456)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் 'த பினான்ஸ்' நிறுவனத்தினர் வாழ்வகக் கட்டடக் பணிகளுக்கும், இரு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும் நிதி உதவி வழங்கியுள்ளனர். வாழ்வகக் கட்டடப் பணிகளுக்கான நிதியை நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் முத்தையா ரகுநாதன், வாழ்வகத் தலைவர் எஸ்.ரவீந்திரனிடம் கையளிப்பதையும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களையும் முதலாவது படத்தில் காணலாம். இரு மாணவர்களுக்கான கல்வி நிதியை உதவி முகாமையாளர் க.பிறின்ஸ், சாவ கச்சேரிக்கிளை உதவி முகாமையாளர் எஸ்.சாந்தகுமார் ஆகியோர் கையளிப்பதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் தோல் 'கிளினிக்' பகுதியின் கூரை சேதம்; மழை வெள்ளத்தால் தவிக்கும் நோயாளர்கள்

நவாலி,ஒக்.17

யாழ்.போதனா வைத்தியசாலை தோல் 'கிளினிக்' அமைந்துள்ள கட்டடத்தின் மேல் கூரை உடைந்து சேதமடைந்துள்ளது. இதனால் மழை நேரங்களில் நோயாளர் கள் பெரும் சிரமங்களை அடைந்து வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது பெய்துவரும் மழையால் உடைந்துள்ள கூரை வழியாக மழைநீர் வடிந்து மருந்தகத்தின் முன் தேங்கி நிற்கின்றது. இதனால் மருந்து எடுப்பதற்காக நோயாளர்கள் வெள்ளத்தில் நின்றவாறு காத்திருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. (202-100)

## சிங்கள மொழிப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பங்களை யாழ்.வலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஜீ.சி.ஈ. சாதாரணதரம், உயர்தரம் ஆகியவற்றில் சித்தியடைந்தவர்களும் மற்றும் அரச ஊழியர்களும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும். (203-302)

## ஆவரங்கால் கிராமம் தொடர்பான நூல் வெளியீட ஏற்பாடு

நல்லூர்,ஒக்.17

ஆவரங்கால் கிராமம் தொடர்பான நூல் ஒன்று லண்டனில் உள்ள ஆவரங்கால் ஒன்றியத்தால் வெளியிடப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது.


ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தினர் இக்கிராமம் தொடர்பான தகவல்களைச் சேகரித்து வருகின்றனர்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஓய்வுபெற்ற அதிபர் அ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-111)

## இடை நிறுத்தப்பட்டிருந்த கடல்தொழில் திணைக்கள கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.பண்ணையில் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டு வரும் கடற்தொழில் நீரியல் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கான நிரந்தரக் கட்டட நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட பகுதி கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.



அண்மையில் குடாநாட்டில் சிமெந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாக 20 மில்லியன் ரூபா செலவில், மத்திய அரசாங்கத்தின் கீழான இந்த வேலைத் திட்டம் அடித்தளக் கட்டுமானத்துடன் ஒப்பந்தகாரரால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் தற்பொழுது 400 சிமெந்துப் பக்கெற்றுக்கள் கட்டட வேலைத் திட்டத்திற்கென வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தக் கட்டட வேலைகள் அடுத்த வருடம் நடுப் பகுதியில் பூர்த்தியாகுமென எதிர் பார்க்கப்படுகிறது.

தற்பொழுது தற்காலிக இடத்தில் இயங்கிவரும் திணைக்களம் நிரந்தரக் கட்டடத்திற்கு மாற்றப்பட உள்ளது-என அவர் மேலும் தெரிவித்தார். (203-302)

## சுழிபுரம் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு புதிய வைத்தியர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

சுழிபுரம் பிரதேச சபை நடத்தும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்குப் புதிய ஆயுள்வேத வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆயுள்வேத வைத்தியர் செல்வி ஸ்ரீபிரியா சந்திரராசா என்பவரே நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய 3 தினங்களில் வைத்திய சேவையை வழங்கி வருகின்றார். (28-204)

## உரிய நிறுவைப் படிகள் இடப்படாது சாவகச்சேரி சந்தையில் மீன் விற்பனை

### பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

சாவகச்சேரி பொதுச் சந்தை மீன்கள் விற்பனைப் பிரிவில் பாவனைகளில் கள்ள தராசுகளில் உரிய படிகள் பயன்படுத்துவ தில்லை எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

உடைந்த படிகள், சைக்கிள் அச்சு, கல் ஆகியவற்றையே நிறுப்பதற்கு வியாபாரிகள் பயன்படுத்தி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அதிக விலை கொடுத்து மீன் வாங்கும் வேளையில் நிறைகுறைவதால் நஷ்டம் ஏற்படுவதாகவும் விசனம் கூறப்படுகிறது.

இதேவேளை சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய வகையில் பழுதடைந்த மீன்கள் பெருமளவில் விற்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. (203)




## யாழ்கோவின் பாற்பொருள் தயாரிப்புக்களின் மீள் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் 'லான்ட் ஓ லேக்ஸ்' பாற்பொருள் அபிவிருத்தி லங்கா நிறுவனமும் இணைந்து நடத்தும் யாழ்கோவின் பாற்பொருள் தயாரிப்புக்களின் மீள் அறிமுக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் இடம்பெறும். (204)

## உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணம் விநியோகம்

நவாலி,ஒக்.17

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வெள்ளைக் கார்ட்டுக்கான நிவாரணம், தொழில் பாதிப்புக்குள்ளானவர்களின் நிவாரணம் என்பன தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசி, மா, சீனி, பருப்பு, தேங்காய் எண்ணெய் ஆகிய பொருள்களே வழங்கப்பட்டு வருகின்றன. (203-100)

## சண்டிலிப்பாய்ப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம்

நவாலி,ஒக்.17

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 23 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

விவசாயக் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முற்பகல் 11 மணிக்கும் நடைபெறுமென்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (203-100)

## வலி.தென்மேற்கில் முதியோர் தினவிழா

நவாலி,ஒக்.17

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும், பிரதேச முதியோர் சங்கங்களும் இணைந்து முதியோர் தின விழாவை நடத்தவுள்ளன.

இந்த நிகழ்வில் முதியோர் சங்கங்களின் நாடகங்களும், முதியோர்களின் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்பும் முதியோர்கள் தத்தமது முதியோர் சங்கங்கள் மூலமும், சங்கங்கள் இல்லாத பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கிராம சேவையாளர்கள் மூலமும் பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பம் செய்யுமாறு பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசா கேட்டுள்ளார். (203-100)

## முதியோர் இல்லங்களைக் குறைப்பதற்கு கூட்டுக் குடும்ப வாழ்க்கையே அவசியம்

### இதன் மூலம் பிள்ளைகளின் மனங்களிலும் அன்பை விதைக்க முடியும்

கோப்பாய்,ஒக்.17

முன்னைய காலத்தில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை குடும்பப் பாங்கை வளர்த்தது. அது பிள்ளைகளின் மனங்களில் அன்பையும் புரிந்துணர்வையும் விதைத்தது. அவ்வாறான ஒரு கூட்டுக் குடும்ப வாழ்க்கையே இன்றைய தேவையாகும். அதன் மூலமே முதியோர் இல்லங்களைக் குறைக்க முடியும்.

இவ்வாறு வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலர் த.நடராசா கருத்துத் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேச முதியோர் தின விழா அண்மையில் புத்தூர் மெதடிஸ்த மிஷன் முதியோர் இல்லத்தில் நடைபெற்றது.

இல்லத்தின் தலைவர் டாக்டர் ஜெயகுலராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே பிரதேச செயலர் மேற்கண்ட கருத்தைக் கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

பிள்ளைகள் தமது பொருளாதார நிலை காரணமாகத் தொழில் வாய்ப்புத் தேடி வேறு பிரதேசங்களுக்கும், நாடுகளுக்கும் இடம்பெயர்ந்து செல்கின்றனர். அந்த வேளையில் பெற்றோர்கள் அனாதரவாக விடப்படுகின்றனர். வேலைப்பளு காரணமாகவும், சூழல் காரணமாகவும் பெற்றோரை மறந்தும் விடுகின்றனர்.

இந்த நிலையில் போதிய அரவணைப் பின்றி பல்வேறு மன அழுத்தங்களுக்குப் பெற்றோர் உள்ளாக நேரிடுகிறது. அவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அரவணைப்பை மேற்கொள்வதன் மூலம் அவர்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம்.

இவ்வாறு வருடத்தில் ஒரு தடவை மட்டும் விழா எடுத்து மகிழ்விக்காமல் அடிக்கடி சந்திப்புக்கள் ஏற்படுத்தி அளவளாவ வேண்டும்.

முன்னைய காலங்களில் குடும்பங்கள் சேர்ந்திருந்தமையால் அவர்கள் மூலம் பிள்ளைகள் பல்வேறு நன்னெறிக் கதைகள், இறை வழிபாட்டு முறைகள் போன்றவற்றை இயல்பாகக் கற்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஆனால் இன்று அவ்வாறில்லை. அறநெறிப் பாடசாலைகள் போன்றவற்றுக்குச் சென்றால் மாத்திரமே இவற்றை அறியலாம் என்ற நிலை தோன்றியுள்ளது.

பல முதியோர் இல்லங்களில் போதிய பொழுது போக்கு வசதிகள் இருக்கின்றன என தெரிவிக்கப்படுகின்ற போதிலும், முதியோர்கள் பலர் தாம் ஒரு வெறுமை நிலையான மனோநிலையைப் பெறுகின்றனர். எனவே இவ்வாறான நிலைகளைத் தவிர்க்க முதியோர்கள் அனைவரையும் எமது மூலதனமாக மதித்துப் போற்றி மகிழ்விக்க வேண்டும்.

95 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின் போது எல்லோரும் வெளியேறிய போதிலும் புத்தூர் மெதடிஸ்த மிசனில் வாழ்ந்த 50 இற்கும் மேற்பட்ட முதியோர்கள் வெளியேற முடியவில்லை. அவர்களை அந்த நிலையிலும் பாதுகாத்த பெருமை இந்த இல்லத்திற்கு உண்டு- என்றார்.

நிகழ்வில் வாழ்வக மாணவன் கு.ஜெகதீசன் 15 இற்கும் மேற்பட்ட பாடல்களை மனனம் செய்து, மிகவும் இரசனையுடன் பாடியமை முதியோர்களின் மனங்களை நெகிழ்வித்தது. (202-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு இல்லாமல் இல்லை!

**இலங்கையில் தமிழர் படும் துன்பங்கள் குறித்தும், அவர்களுக்கான தீர்வுகள் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ள கட்டுரை தமிழக நாளேடான 'தின மணி' யில் நேற்று வெளிவந்தது.**

**சி.மகேந்திரன் என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரையின் முழு வடிவம் இங்கு தரப்படுகிறது.**

தொடு வானத்திற்கும் இலஙகைத் தமிழ் மக்களின் துயரத் தீர்வுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு இருப்பதைப் போன்றே தோன்றுகிறது. எத்தனை லட்சம் மனித இழப்புகள், எத்தனை கோடி பொருளாதார இழப்புகள். ஆதரவற்றவர்களாக மரநிழல்களின் ஓரங்களில் அண்டி நிற்கும் தமிழ்மக்களின் பெருங்கூட்டம். இவர்கள் அனைவருக்குமே பிரச்சினையின் தீர்வு தொடுவானத்தை நோக்கிய பயணமாகத்தான் அமைந்து போனது. எல்லாவற்றிற்கும் ஒரு தீர்வு உண்டென்றால் தமிழர் பிரச்சினைக்கும் ஒரு தீர்வு இருக்கத்தான் செய்கிறது. இது ஆதாரமற்ற நம்பிக்கை அல்ல. இன்றைய அரசியல் வாழ்வில் உள்ளீடாக அமைந்த வலிமை மிகுந்த சாத்தியங்கள். இந்த சாத் தியங்கள் குறித்து, தமிழக மககள் ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

**பயங்கரவாதத்தை ஒழித்தல்**

சிலரால் வலிந்து பிரசாரம் செய்யப்படுவதைப்போல, இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படை, தமிழ்மக்களின் அதிதீவிர ஆயுத நடவடிக்கைகளில் இல்லை. இப்படியொரு மாயத்தோற்றத்தை பல ஆண்டுகளுக்கு முன்னரே உருவாக்கி வைத்து விட்டார்கள். பயங்கரவாதத்தை ஒழித்து விட்டுதான், தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதான இலங்கை அரசின் மாய அரசியலுக்கு இந்தப் பொய்க் கட்டுமானம் இன்று வரை உதவி செய்து கொண்டிருக்கிறது. ஆனால், வரலாற்று உண்மைகளை ஆராய்ந்து பார்த்தால், இலங்கைத் தமிழ் மக்கள் ஆயுதம் தாங்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் [illegible]தை அறிந்து கொள்ள இயலும்.

இலங்கைக்கான சுதந்திரம், 1948ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அன்று தொடங்கிய தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் இன்னமும் இலங்கையில் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் இந்தப் போராட்டத்தின் இன்றைய வயது 60. ஆரம்பத்தில் இந்தப் போராட்டம் காந்தியின் அறவழிப் போராட்டமாகத்தான் தொடங்கியது. தமிழ் மக்களின் உரிமைப் போரைத் தலைமையேற்று நடத்திய தந்தை செல்வா அன்றைய காலத்தில் ஈழத்தின் காந்தி என்றே அழைக்கப்பட்டார். உண்ணா விரதப் போராட்டத்தையும், சத்தியாக்கிரகத்தையும் தவிர வேறு எதையும் அன்றைய ஈழமக்கள் அறிந்திருக்கவில்லை.

**ஆட்சிமொழி**

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று இலங்கை அரசு அறிவித்தது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் தலைமையில் சுமார் 200 தொண்டர்கள் இலங்கையின் தலைநகர் கொழும்பில் உண்ணாவிரதம் இருந்தார்கள். காந்தியின் தொண்டர்களாகவே கருதி அறப் போராட்டத்தில் ஈடுபட்ட இவர்களை சிங்களக் காடையர்கள் என்று அழைக்கப்படும் ரவுடிகளும், பொலிஸாரும் இணைந்து மூர்க்கத்தனமாகத் தாக்கினார்கள். துப்பாக்கிச் சூட்டில் இருவர் இறந்து போனார்கள். இந்தக் கசப்பான அனுபவங்களுக்குப் பின்னர்தான் 35 ஆண்டுகளாக நடத்திப் பார்த்த காந்திய வழி, பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் பின்னர் தொடங்கப்பட்ட ஆயுதப் போராட்டம் கடந்த 25 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தப் பின்னணிகளை எல்லாம் ஆராய்ந்து பார்க்காமல், தமிழ் மக்கள், சிங்கள மக்களோடு இணைந்து வாழத்தெரியாத முரண்பாட்டில் தான் பிரச்சினைகள் முளைவிடுகின்றன என்ற மனநிலையை நம்மிடம் உருவாக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. சிலர், இதற்கும் ஒரு படி மேலே சென்று, இலங்கைக்கு பிழைக்கச் சென்ற தமிழ் மக்கள், அந்த நாட்டவரிடம் இணங்கி, அடங்கி நடக்க வேண்டாமா - என்று உபதேசிக்கத் தொடங்கி விடுகிறார்கள். தமிழகத்திலிருந்து சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்மக்கள் மலையகத்திற்கு கூலிகளாகச் சென்றுள்ளார்கள் என்பது உண்மைதான்.

**விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள்**

தோட்டம் அமைக்கும் கடும் உழைப்பில் ஈடுபட்ட தமிழ் மக்கள், 1841 முதல் 1858 வரை தொற்றுநோயாலும் மலையைப் பிளந்து பாதை அமைக்கும் விபத்துகளினாலும் சுமார் 90 ஆயிரம் பேர் இறந்து போனார்கள் என்பதுதான் இந்த அதிர்ச்சி. இவர்களின் சந்ததியினரில் 5 லட்சம் தமிழ் மக்கள் லால்பகதூர் சாஸ்திரி - பண்டாரநாயக ஒப்பந்தத்தின்படி அந்த நாட்டை விட்டு விரட்டி அடிக்கப்பட்டார்கள்.

உலகில் எந்த நாடாக இருந்தாலும் சில ஆண்டுகளாக அந்த நாட்டில் குடியிருந்தால் அவர்களை அந்த நாடு குடிமக்களாக ஏற்றுக்கொள்கிறது. இன்றும் இலங்கைக்கான அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் தேயிலைத் தோட்டங்களை, ஆதியில் தங்கள் எத்தத்தால் பத்தி கட்டி உருவாக்கிய, தமிழ் மக்களை அந்த நாட்டைவிட்டு வெளியேற்றிய குற்றஉணர்வு எந்த சிங்கள அரசியல் தலைவருக்காவது இருக்கிறதா?

மலையகத் தமிழர்கள், காலனிய காலங்களில் இலங்கை சென்றனர் என்பது உண்மை என்றாலும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை வாழ்விட மாகக் கொண்ட தமிழ் மக்கள், இந்தியாவிலிருந்து சென்றவர்கள் அல்லர். சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

**இரண்டாம் தரக்குடிமக்கள்**

சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கை அரசு தமிழ் மக்களை இரண்டாந்தர குடிமக்களாக மாற்ற வேண்டும் என்பதிலேயே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்துள்ளது. இரண்டாந் தரக் குடிமக்களாக்கும் திட்டத்தில் தமிழ் மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பது முதலாவது நோக்கமாகத் தெரிகிறது.

கிழக்கு மாகாணத்தைக் குறிவைத்து அங்கிருந்த தமிழ் மக்களை வன்முறையால் வெளியேற்றிவிட்டு, அங்கு சிங்கள மயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனை ஒரு புள்ளிவிவரம் தெளிவுபட விளக்குகிறது. 1827ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி திருகோணமலையில் தமிழ் மக்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 663 பேர். ஆனால் சிங்கள மக்களின் எண்ணிக்கை 250 பேர் மட்டும் தான்.

இன்று கொஞ்சம் கொஞ்சமாக சிங்கள மக்கள் இந்தப்பகுதியில் பெரும்பான்மையைப் பெற்று வருகிறார்கள். தமிழ் மக்கள் மீதான தாக்குதலை ஒருபுறத்தில் இவ்வாறு நடத்திக் கொண்டே, மறுபுறத்தில் இலங்கை, பெரும்பான்மை சிங்கள இனத்திற்குச் சொந்தமான நாடு என்பதை சட்டப்பூர்வமாக மாற்றிக் கொள்ளும் தந்திரத்தைப் பின்பற்றி வந்துள்ளது. இலங்கைக்கான முதல் அரசியல் சட்டத்தை வழங்கியவர்கள் ஆங்கிலேயர்தான். இது சோல்பாரி அரசியல் சட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இதனடிப்படையில் மாநில அரசு, மத்திய அரசு என்று கூட்டாட்சி இல்லாமல் ஒரே அரசைக் கொண்ட, ஒற்றையாட்சியாக இருந்தபோதிலும், ஒற்றையாட்சி என்றோ அல்லது கூட்டாட்சி என்றோ இது தன்னை அழைத்துக் கொள்ளவில்லை.

**இலங்கையின் முதல் அரசியல் சட்டம்**

அடிப்படையில் இதனை ஆராய்ந்து பார்த்தால், அரசியல் சட்டத்தை அமைத்தவர்களுக்கு இது எதிர்காலத்தில், இலங்கை கூட்டாட்சியாக பரிணாமம் பெற வேண்டும் என்ற நோக்கம் இருந்ததை உணர்ந்து கொள்ள முடியும்.

1972ஆம் ஆண்டில் தான் இலங்கையில் முதல் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டது. 25 ஆண்டுகளுக்குப் பின்னர் சுதந்திர இலங்கையில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, இனப்பிரச்சினையை முற்றாகத் தீர்க்கும் அரசியல் சட்டத்தை வகுத்திருக்க முடியும்.

இலங்கை அரசு இதற்கு நேர் எதிராகச் செயற்பட்டது. பிரிட்டிஷ் அரசால் இலங்கைக்கு அளிக்கப்பட்ட சோல்பாரி அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கிக் கொடுத்த சிறுபான்மை தமிழர்களுக்கான பாதுகாப்பை இது முற்றாக நீக்கிவிட்டது. முதல் முறையாக இலங்கை கூட்டாட்சி நாடு அல்ல, இது ஒற்றையாட்சிதான் என்று அரசியல் சட்டம் உறுதி செய்து அறிவித்தது.

இதற்குப் பின்னர் அறிவிக் கப்பட்ட எவையும் தமிழ்மக்களுக்கு உரிமை வழங்கும் கூட்டாட்சி முறையை ஏற்றுக் கொள்ள வில்லை. சிறுபான்மை மக்களைப் பெரி தும் அடிமைப்படுத்திக் கொள்ளும் ஒற்றை யாட்சி முறையை மேலும் மேலும் வலு வாக்கிக் கொண்டன.

அரசியல் சட்டத்திலும் பாதுகாப்பு இல்லை. அரசு தனது பயங்கரவாதக் கொடுமைகளை நிறுத்திக் கொள்வதாக இல்லை. அடுத்த தமிழ் மக்கள் என்னதான் செய்ய முடியும். ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது.

இன்று தமிழ் மக்கள் என்றும் சந்திக்காத பெரும் துயரத்தை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். விமானக் குண்டுகளால் இரத்தத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் உடல்கள், தொலைக்காட்சிகள் மூலம் தோன்றி நமது மனச்சாட்சியைப் பெரிதும் துன்பப்படுத்திக் கொண்டிருக்கின்றன. உலகில் யார் இதனைக் கண்ணுற்றாலும் கட்டாயம் சகித்துக் கொள்ள இயலாது.

சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசியல் கட்சிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? யுத்தத்தை முழுமையாக ஆதரித்துப் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. சில கட்சிகள் தமிழ் மக்களுக்குப் பேரழிவை உருவாக்கிக் கொண்டிருக்கும் யுத்தத்திற்கு படைதிரட்டும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

**அரசியல் தீர்வு**

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில், இலங்கை அரசை முற்றாக நம்ப முடியாது என்பது மேலும் மேலும் உறு[illegible] படுத்தப்படுகிறது. நோர்வே நாட்டு[illegible] நடத்திய பேச்சுகள், இடைக்கால ஆட்சி நிர்வாகத்திற்கான தீர்வுத் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகள் அளித்திருந்தனர்.

இதைப்போன்றே ஆழிப்பேரலை பாதிப்பு உதவிகளைப் பெறுவதிலும் இலங்கை அரசோடு இணைந்து சில செயற்பாட்டிற்கான அறிவிப்புகளைபுலிகள் இயக்கம் வெளிப்படுத்தியி ருந்தது. அரசியல் தீர்வுக்கான இந்த வளர்ச்சி நிலைகளை இலங்கை அரசு முற் றாகப் புறக்கணித்து, அரசியல் தீர்வுக்கான எந்தத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையோடு கூடிய கூட்டாட்சிதான் இன்றைய பிரச்சினைக்கு தீர்வாக அமைய முடியும். உலகில் பல நாடுகளில் நடந்துள்ள இனப் பிரச்சினைகள் இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றி தீர்வைப் பெற்றுள்ளன.

இதற்கு முந்தைய நடைமுறைகள[illegible] போல் இல்லாமல் இப்பொழுது இலங்[illegible] அரசு தான், முதலில் தங்கள் தீர்வுத் திட்டத்தை முன் வைக்க வேண்டும். இதில் தமிழகத்தின் வலிமையான தலையீட்டால் இந்தியா பொறுப்பேற்றுச் செயற்பட வேண்டும்.

ஆனால் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்திய அரசின் ஆதரவுடன் அனைத்தும் நடந்து கொண்டிருக்கிறது என்று கூறியுள்ளார். இதற்கான பதிலை மன்மோகன் சிங் விரைவில் சொல்லுவார் என்று நாம் எதிர்பார்க்கலாம். ✱

## மரண அறிவித்தல்

### அருணாசலம் விஸ்வநாதன்

(யா/அருணோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர்

*B.A London, 1st Class TRD-MAHARAGAMA*)



பிள்ளையார் வீதி, அளவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் விஸ்வநாதன் (15.10.2008) புதன் கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் இலட்சுமியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் (*B.A. LONDON* - ஓய்வுபெற்ற ஆசிரியர், வைத்தீஸ்வராக் கல்லூரி) அன்புச் சகோதரனும் திருமதி விக்னேஸ்வரி கந்தையா (*LION*, ஓய்வுபெற்ற ஆசிரியை- மல்லாகம் மகாவித்தியாலயம்), திருமதி மங்கையர்க்கரசி சிவநேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியை - அருணோதயாக் கலலூரி), சிவராஜசிங்கம் (கணக்காளர்), காலஞ்சென்ற சிவானந்தராசா (*Draughtsman* படவரைஞர்), சிவஞானசேகரம் (ஆசிரியர்,சென். ஜோன்ஸ் கல்லூரி), காலஞ்சென்ற சிவதாசன், சிவரூபன் (*Hatton National Bank - Colombo*) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வி.கந்தையா (ஓய்வுபெற்ற கணக்காளர் - அத்தியட்சகர்), சிவநேசன், செல்வநாயகி, மனோராணி, சிவயோகராணி, ஆதிரை ஆகியோரின் அன்பு மாமனாரும், அருளானந்தம் (ஓய்வுபெற்ற *T.O*), நித்தியானந்தம் (ஓய்வுபெற்ற உதவி மதிப்பீட்டாளர்), புனிதவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, *St. Brigets Convent, Colombo*), திலகவதி, சுகுணவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும், சிவதாசன், சிவலிங்கதாசன், சிவதர்சினி, சிவதர்மினி, கபிலன், நவனீதன், நந்தகுமார், தர்சிலா (சேவாலங்கா), நிக்ஷலா, கலைவாணி, சிவனுஜன், பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனும் அக்ஷயன், சுஜா, நிஜா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர் வரும் (20.10.2008) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பிள்ளையார் வீதி, அளவெட்டி." தகவல்:
*T.P:- 060 221 9572* மனைவி, பிள்ளைகள்,குடும்பத்தினர்.

## நடமாடும் மருத்துவ சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.17

கோப்பாய் கால்நடை வைத்திய பிரிவின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ சேவை நடைபெறவுள்ளது.

இந்தச் சேவை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் செல்வபுரம் சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது என கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (72-204)

## நயினை நாகபூசணி அறங்காவலர் ஏற்பாட்டில் இலவச வைத்திய முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் இலவச வைத்திய முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அம்மன் கோயிலில் இடம் பெறும்.

இந்த வைத்திய சேவையில் இருதய வைத்திய நிபுணர், பொது வைத்திய நிபுணர், குழந்தை வைத்திய நிபுணர், சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர், தோல் வைத்திய நிபுணர், கண் வைத்திய நிபுணர், காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் ஆகியோர் கலந்துகொண்டு சேவைகளை வழங்கவுள்ளனர். (149-204)

**யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி**
**தரம்-6 அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்-2009**

தரம்-6 அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை பாடசாலை நேரத்தில் கல்லூரி அலுவலகத்தில் பெற்று ஒக்ரோபர் 30ஆம் திகதிக்கு முன் பூரணப்படுத்தி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

-அதிபர்.

(79276)

**யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**பொதுக் கூட்டம் - 2008**

இடம்: விசாலாட்சி மண்டபம்
காலம்: 25.10.2008(சனிக்கிழமை)
நேரம்: முற்பகல் 10 மணி

அனைத்துப் பழைய மாணவர்களையும்
தவறாது சமுகமளிக்குமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர். (7927) -செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்தும், இந்திய அரசைத் தலையிடக் கோரியும்

# இராமேஸ்வரத்தில் களமிறங்கிப் போராட எரிமலையாகப் புறப்படுகிறது திரையுலகம்

## சென்னையிலிருந்து நாளை தனி ரயிலில் நடிகர், நடிகைகள்

இராமேஸ்வரம், ஒக்.17

**இலங்கை இராணுவத்தால் அரக்கத்தனமாக - மூர்க்கத்தனமாக - விலங்குகளை விடக் கொடூரமான முறையில் ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப் படுகின்றமையைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் நடைபெறவுள்ள பிரமாண்டமான பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியக் கலையுலகமே வீறு கொண்டெழுந்து புறப்படுகிறது. நடிகர் - நடிகைகள் சென்னையிலிருந்து நாளை தனி ரயிலில் புயலாகப் புறப்பட்டுச் செல்கிறார்கள்.**

இந்த விடயம் தொடர்பான முழு விவரம் வருமாறு-

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து இராமேஸ்வரத்தில் நாளை மறுதினம் 19ஆம் திகதி பேரணியும், பொதுக்கூட்டமும் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை செய்யகடந்த புதன்கிழமை காலை இயக்குநர்கள் பாரதிராஜா, மனோஜ்குமார், சசிமோகன், வேல்முருகன் ஆகியோர் இராமேஸ்வரம் வந்தனர்.

பஸ்நிலையம் அருகேயுள்ள கிழக்காடு மைதானத்தைப் பொதுக்கூட்டம் நடத்துவதற்கான இடமாகத் தேர்வு செய்தனர். அதன்பிறகு இயக்குநர் பாரதிராஜாவும் அவருடன் வந்தவர்களும் தனுஷ்கோடி கடற்கரையில் நேற்று முன்தினம் வந்திறங்கிய 8 அகதிகளைச் சந்தித்துப் பேசினர். அவர்களுக்கு பிஸ்கெட், ரொட்டி, பழம் போன்றவற்றை வழங்கினர்.

பின்னர் பாரதிராஜா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

ஈழத் தமிழர் பிரச்சினையில் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழக எம்.பிக்கள் அனைவரும் பதவி விலகுவோம் என அறிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

வருகின்ற 19ஆம் திகதி தமிழ்த் திரை உலகம் சார்பில் கண்டனப் பேரணி நடத்தப் படுகிறது. இராமேஸ்வரத்தில் நடத்த முடிவு செய்தமை இலங்கைக்கு அருகாமையில் உள்ளது மட்டுமல்லாது, உலகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரையும் ஈர்ப்பதற்கே இந்தப் போராட்டம். இந்தப் பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தில் சென்னையிலிருந்து கலை உலகைச் சேர்ந்தவர்கள் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

நாளை மாலை 4 மணி அளவில் சென்னையிலிருந்து தனி ரயில் மூலம் புறப்பட்டு மதுரை வருகிறார்கள். அங்கிருந்து 19ஆம் திகதி காலை அதே ரயிலில் புறப்பட்டு மதியம் ஒரு மணிக்கு இராமேஸ்வரம் ரயில் நிலையத்தை அடைவார்கள்.

மாலை 3 மணிக்கு இராமேஸ்வரம் ரயில் நிலையத்தில் இருந்து பேரணி புறப்பட்டு பஸ் நிலையம் அருகே கிழக்காடு மைதானத்தை அடைகிறது. பின்னர் அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும் - என்றார்.

இயக்குநர் பாரதிராஜா மற்றும் இயக்குநர்கள் மண்டபம் முகாமில் உள்ள அகதிகளைச் சந்தித்து அவர்களிடம் குறைகளைக் கேட்டறிய நேற்றுமுன்தினம் மதியம் 12 மணியளவில் 3 கார்களில் மண்டபம் அகதிகள் மறுவாழ்வுத் துறை அலுவலகத்துக்கு வந்தனர். அங்கு தனி கலெக்டர் அருணாச்சலத்தைச் சந்தித்து அகதிகளைச் சந்திக்க அனுமதி கேட்டனர்.

அதற்கு அவர் சென்னை அலுவலகத்தில் அனுமதி பெறவேண்டும் என்று கூறி அனுமதி மறுத்துவிட்டார். இதையடுத்து பாரதிராஜா உள்பட இயக்குநர்கள் மண்டபம் அகதிகளைச் சந்திக்க முடியாமல் திரும்பிச்சென்றனர்.

சென்னையில் உள்ள தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய 4 மொழிகளைச் சேர்ந்த தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையரங்க அதிபர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.



இதன் அவசர செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. 4 மொழிகளைச் சேர்ந்த 50 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். கூட்டத்துக்கு, தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைத் தலைவர் கே.ஆர்.ஜி. தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்-

★ இலங்கை அரசு நடத்தும் தமிழ் இனப் படுகொலையை கண்டித்து, தமிழ் திரையுலகம் திரண்டு இராமேஸ்வரத்தில் நடத்த இருக்கும் பேரணிக்கு, தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை தனது ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறது.

★ தமிழ் இன மக்களைக் கொல்லப் பயன்படுத்தும் ஆயுதங்களை இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

★ போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும், மருந்தும் சேகரித்து அனுப்பி, செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் விநியோகிக்க வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 2100 திரையரங்குகளில் படக் காட்சிகள் ரத்து!

சென்னை, ஒக்.17

இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து திரையுலகம் சார்பில் இராமேஸ்வரத்தில் வரும் 19ஆம் திகதி பேரணி நடைபெறுகிறது. இதையொட்டி தமிழகம் முழுவதும் 19ஆம் திகதி திரையரங்குகளில் பகல் காட்சிகள் ரத்து செய்யப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர் பிரச்சினையில் தீர்வு காண மத்திய அரசு தலையிட வேண்டும் என வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் நடக்கும் கண்டனப் பேரணி, பொதுக்கூட்டத்தில் திரையுலகைச் சேர்ந்த அனைத்து திரைப்படச் சங்கங்களும் பங்கேற்கின்றன.


இதையொட்டி 18, 19, 20 ஆகிய மூன்று நாள்களுக்கு சினிமா சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் ரத்துச் செய்யப்படுகின்றன. இதையடுத்து போராட்டம் நடைபெறும் 19ஆம் திகதி தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் பகல் காட்சிகள் ரத்து செய்யப்படுகின்றன.

இதுகுறித்து தமிழகத் திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அண்ணாமலை நேற்றுமுன்தினம் கூறியவை வருமாறு-

இராமேஸ்வரத்தில் 19ஆம் திகதி நடைபெறும் கண்டனப் பேரணியில் திரையரங்கு உரிமையாளர்களும் தொழிலாளர்களும் கலந்துகொள்கிறார்கள். அதனால் அன்றைய தினம் தமிழகம் முழுவதும் உள்ள 2,100 திரையரங்குகளில் பகல் காட்சிகள் ரத்து செய்யப் படுகின்றன.

# ஈழத் தமிழர்கள் பிரச்சினைக்கு தனி ஈழம்தான் நிரந்தரத் தீர்வு

## பா.ம.கவின் நிலைப்பாடு இது



திண்டிவனம், ஒக்.17

ஈழத் தமிழர் பிரச்சினைக்காக தமிழக எம்.பிக்கள் ராஜினாமா செய்ய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு முழு ஆதரவு தெரிவிக்கிறது என்றும் -

விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசு உடனடியாக பேச்சைத் தொடங்குவதற்கான முயற்சிகளை இந்திய அரசும், தமிழக அரசும், முதல்வரும் எடுக்க வேண்டும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பா.ம.கவின் தலைமை செயற்குழுக் கூட்டம் கட்சியின் அரசியல் பயிலரங்கத்தில் நேற்று முன்தினம் காலை நடந்தது. கூட்டத்துக்கு கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் முன்னிலை வகித்தார். கட்சியின் தலைவர் மணி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தனி ஈழம் அமைவதுதான் நிரந்தரத் தீர்வாக அமையும்.

★ இலங்கை இராணுவத்துக்கு ஆயுத உதவியும், போர்ப்படை பயிற்சியும் அளிப்பதை இந்தியா உடனடியாக நிறுத்த வேண்டும், தமிழக மீனவர்களை காட்டுமிராண்டித்தனமாக தாக்கி வரும் இலங்கைக் கடற்படையினரின் கொடுமைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று சென்னையில் தமிழக அரசின் சார்பில் நடத்தப்பட்ட அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு பா.ம.க. செயற்குழு முழு ஆதரவு தெரிவிக்கிறது.

இந்தக் கோரிக்கைகளை எல்லாம் 15 நாள்களுக்குள் நிறைவேற்றி வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும், அதற்குள் நிறைவேற்றாவிட்டால் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலக வேண்டும் என்ற முடிவையும் பா.ம.க. முழு மனதோடு ஆதரிக்கிறது.

★ விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசு உடனடியாக பேச்சைத் தொடங்குவதற்கான முயற்சிகளை இந்திய அரசும், தமிழக அரசும், முதல்வரும் எடுக்க வேண்டும் என்று செயற்குழு வற்புறுத்துகிறது போன்றவை உள்ளிட்ட பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# எம்.பிக்கள் ராஜினாமாச் செய்தாலும் 13 அமைச்சர்களும் பதவி விலகுவரா?

## கேள்வி எழுப்புகிறார் விஜயகாந்த்

சென்னை, ஒக். 17

ஈழத் தமிழர் பிரச்சினைக்காக தமிழக எம்.பிக்கள் ராஜினாமாச் செய்தாலும், 13 அமைச்சர்களும் பதவியிலிருந்து விலகுவார்களா - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கேள்வியெழுப்பியுள்ளார்.

தே.மு.தி.க. மாநில இளைஞரணி மாநாடு வரும் 18ஆம் திகதி சென்னைத் தீவுத்திடலில் நடக்கிறது. மாநாட்டு பந்தல் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்ட விஜயகாந்த், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த விஜயகாந்த் -

ஈழத் தமிழர் மீதான தாக்குதலை நிறுத்த இந்தியா வலியுறுத்தா விட்டால் தமிழக எம்.பிக்கள் பதவி விலக நேரிடும் என்று அனைத்து கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதே?



நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்கள்தான் உள்ளன. எம்.பிக்கள் ராஜினாமாச் செய்தாலும், அமைச்சர்கள் தொடர்ந்து நீடிக்க வாய்ப்பு உள்ளது.

தமிழக எம்.எல்.ஏக்களை ராஜினாமா செய்ய வலியுறுத்துவீர்களா?

கெடு இன்னும் முடியவில்லை. நானும் அவர்களுக்கு நேரம் கொடுக்கிறேன். அதற்கு பின்னர் இந்தக் கேள்விக்கு கருத்துத் தெரிவிப்பேன் - என்றார்.

# தமிழக எம்.பிக்களின் ராஜினாமாத் திட்ட முடிவு மத்திய அரசைப் பாதிக்காது; ஆட்சி கவிழாது!

## இல.கணேசன் தெரிவிப்பு



சென்னை, ஒக்.17

ஈழத் தமிழர் பிரச்சினைக்காகத் தமிழக எம்.பிக்கள் எடுத்துள்ள ராஜினாமா முடிவு மத்திய அரசைப் பாதிக்காது - என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் இல.கணேசன் கூறியுள்ளார்.

இலங்கையில் ஈழத் தமிழர்கள் கொல்லப்படுவதை கண்டித்து, பா.ஜ.க. சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியவை வருமாறு-

மத்திய ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகள் காலமாக தி.மு.க. அங்கம் வகித்து வந்தது. அப்போது, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசும், ஈழத் தமிழர்களின் நலன் காக்க, உரிமைகளைப் பெற்றுத்தர முயற்சி மேற்கொள்ளவில்லை.

[illegible] மத்திய அரசு இலங்கை இராணுவத்திற்கு 256 பொறியியலாளர்களை உதவி செய்ய அனுப்பியுள்ளது. தற்போது நடைபெற்ற தாக்குதலில் 2 பொறியியலாளர்கள் காயமடைந்தபோதுதான் இந்த உண்மை வெளியே தெரியவந்தது. ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இது குறித்து முதல்வர் கருணாநிதி எதுவும் பேசவில்லை.

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பு வேண்டும். சிங்களர்களுக்குச் சமமாக மதிக்கப்பட வேண்டும். செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உணவு, மருந்துகளை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த தமிழக ஆளுநருக்கு பா.ஜ.க. சார்பில் மனு ஒன்று அனுப்ப உள்ளோம்.

இலங்கைப் பிரச்சினையில் 2 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தமிழக எம்.பி.க்கள் ராஜினாமா செய்வார்கள் என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். இவர்களின் ராஜினாமா முடிவு மத்திய அரசைப் பாதிக்காது. ஆட்சியும் கவிழாது - என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ.க. தேசிய செயலாளர் திருநாவுக்கரசர் எம்.பி, பொதுச் செயலாளர் தமிழிசை சௌந்தரராஜன், மாநிலத் துணைத் தலைவர் குமாரவேலு, முன்னாள் மாநிலத் தலைவர் லட்சுமணன், கவிஞர் காசிமுத்து மாணிக்கம், தி.நகர் வேதா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் கபட நாடகம் ஆடுவது யாரெனத் தமிழருக்குத் தெரியும்

## ஜெயலலிதாவுக்கு கருணாநிதி பதில்

சென்னை, ஒக்.17

ஈழத் தமிழர் பிரச்சினையில் கபட நாடகம் ஆடுவது யார் என்பதை தமிழக மக்கள் அறிவார்கள் - என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவுக்கு முதலமைச்சர் கருணாநிதி பதிலளித்துள்ளார்.

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை விமர்சித்து அறிக்கை வெளியிட்ட ஜெயலலிதா, கருணாநிதியின் கபட நாடகத்தை கண்டு தமிழர்கள் ஏமாற மாட்டார்கள் என்று கூறியிருந்தார்.

அவருடைய குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்து முதலமைச்சர் கருணாநிதி-

'கபடம் என்றால் வஞ்சகம் என்று அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. அதற்கு தமிழகத்தில் பொருத்தமானவர்கள் யார் என்பதை தமிழர்கள் நன்றாகவே அறிவார்கள்' என்று தெரிவித்துள்ளார்.

சிங்களர்களுக்கு ஆதரவாக ஜெயலலிதா கருத்துக் கூறியிருப்பதை இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் [illegible] காட்டியிருப்பது [illegible] வெளிவந்திருக்கிறது எனவும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொகாலியில் இன்று இரண்டாவது டெஸ்ட்!



மொகாலி, ஒக். 17

மொகாலியில் இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று துவங்கவுள்ள நிலையில் நேற்று முன் தினம் புயலுடன் கூடிய கனத்த மழை பெய்தது.

இதையடுத்து மைதானம் முழுவதும் நீர் தேங்கியுள்ளது. இன்றுமுதல் காலநிலையில் நல்ல மாற்றம் இருக்கும் என்பதால் போட்டி ஐந்து நாட்களும் முழுமையாக நடக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. பெங்களூரில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. இரண்டாவது டெஸ்ட் இன்று மொகாலியில் நடக்

## மழை குழப்புமா

கிறது. இந்திய ஆடுகளங்களில் மொகாலி வேகப்பந்து வீச்சுக்கு அதிகம் கைகொடுக்கும் என்பதால் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் உற்சாகத்துடன் பங்கேற்க வந்திருக்கின்றனர். ஆனால், அங்கு தொடர்ந்து மழை பெய்து வருவதையடுத்து வேகப் பந்துவீச்சு எடுபடாது எனத் தெரிகிறது. மழை நின்றால் மட்டுமே ஆடுகளம் ஓரளவுக்காவது வேகத்துக்கு ஏற்ற வகையில் மாற்றமுடியும் என ஆடுகள பராமரிப்பாளர்களும் கைவிரித்து விட்டனர். இதையடுத்து மொகாலியில் சுழற்பந்து வீச்சாளர்கள் அசத்தும், வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஆடுகளம் குறித்து பி.சி.சி.ஐ.,யின் மைதான மற்றும் ஆடுகள சபையின் தலைவரும், மொகாலி ஆடுகள பராமரிப்பாளருமான தல்ஜித் சிங் அளித்த பேட்டியில்,

காலநிலையில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றத்தால் ஆடுகளம் பராமரிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. மைதானத்தை மூடியிருந்த தார்ப்பாய்கள் பலத்த காற்றில் பறந்து விட்டன. மைதானம் முழுவதும் நீர் தேங்கியுள்ளது. வீரர்கள் பயிற்சி செய்யத் தயாராக வைத்திருந்த ஆடுகளங்கள் அனைத்தும் மழையால் பாதிக்கபபட்டுவிட்டன.

ஆனால், இரண்டாவது டெஸ்ட் நடக்கும் ஆடுகளத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. போட்டிக்கு முன்னதாக எங்களால் முடிந்த வரை கடுமையாக முயற்சி செய்து, மைதானத்தை நல்ல நிலைக்கு கொண்டு வருவோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## இந்திய கிரிக்கெட்டுக்கு இன்னொரு சச்சின்!

ஹைதராபாத்தில் பாடசாலைகளுக்கிடையே நடந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நிகிலேஷ் சுந்தரம் என்ற மாணவன் 334 ஓட்டங்கள் குவித்து உலக சாதனை படைத்தார். ஜூனியர் அளவில் இவ்வளவு ஓட்டங்கள் குவித்தமை உலகத்தில் இது தான் முதல்தடவை என்று கிரிக்கெட் சபையினர் தெரிவித்தனர்.

176 பந்துகளை எதிர்கொண்டு 54 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை நிகிலேஷ் எடுத்தார். அங்குள்ள சென் ஜோன்ஸ் சேர்ச் ஜூனியர் பாடசாலையில் 9ஆம் வகுப்பில் படிக்கிறார் நிகிலேஷ்.

இதற்கு முன்பு ஹைதராபாத்தைச் சேர்ந்த தும்பி என்ற மாணவன் 324 ஓட்டங்கள் எடுத்தமையே சாதனையாக இருந்தது. தும்பியும் மனோஜ் குமார் என்ற மாணவனும் (320) சேர்ந்து தொடக்க விக்கெட்டுக்கு 721 ஓட்டங்கள் எடுத்து டெண்டுல்கர் - காம்ப்ளி ஜோடியின் 664 ஓட்டங்கள் என்ற சாதனையை 2 ஆண்டுகளுக்கு முன்பு முறியடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## இன்னும் வெறுளம் 15!

சண்டிகர், ஒக். 17

இந்திய வீரர் சச்சின், டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் வரிசையில் இரண்டாவது இடம்பிடித்துள்ளார். முதலிடத்தில் இருக்கும் மேற்கிந்தியத் தீவுகளின் லாராவை முந்த இவருக்கு வெறும் 15 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்படுகின்றன. சமீபத்தில் நடந்த பெங்களூர் டெஸ்டில் இவர் இச்சாதனையை எட்டுவார் என எதிர் பார்த்த நிலையில் ஏமாற்றமே கிடைத்தது. இந்நிலையில் மொகாலியில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சச்சின் இருக்கிறார் எனத் தெரிகிறது. ஒருநாள் தலைவர் டோனியை பின்பற்றி காலை உணவில் சூடான பாலில் மஞ்சள் கலந்து குடித்து வருகிறார்.

இது குறித்து 'செப்' ரமித் கோஹ்லி அளித்த பேட்டியி[illegible] அடித்து நொறுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் களமிறங்கும் அன்று காலையில் சூடான பால் குடித்து விட்டுச் செல்வார். கடந்த முறையும் இங்கு விளையாட வந்த போது சூடான பால் கேட்டார். ஒவ்வொரு முறையும் பாலுடன் மஞ்சள் சேர்த்து குடிப்பார். இம்முறையும் 'சூடான பால்' குடித்து வருகிறார். அவர் வாழைப்பழம் மற்றும் முட்டையை விரும்பி சாப்பிட்டார் - என்றார்.

இதேவேளை, சாதனைகளுக்காக சச்சின் டெண்டுல்கர் ஒருபோதும் விளையாடியது கிடையாது. அதனால் ஆட்டத்தின் நெருக்கடியைப் பெறவேண்டிய அவசியமும் அவருக்குக் கிடையாது என சச்சினுடன் சிறுவயது முதல் நண்பராக இருந்துவருபவரும், இந்திய அணியின் முன்னாள் வீரருமான வினோத் காம்ப்ளி கூறினார்.

இது குறித்து பிடிஐ செய்திநிறுவனத்திடம் காம்ப்ளி கூறியதாவது,

கிரிக்கெட்டுக்காகவே சச்சின் வாழ்கிறார். அதை அனுபவித்து விளையாடுவதே அவரது விருப்பம்.



என்றாலும் சாதனைக்காக ஒருபோதும் அவர் விளையாடியது கிடையாது. சாதனை படைக்கவேண்டும் என்ற நோக்கில் நெருக்கடியைத் தேடிக்கொள்வதும் கிடையாது.

நிச்சயம் 2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பைப் போட்டி வரை விளையாடுவார். இது வரையிலான கிரிக்கெட்டில் அவர் சாதிக்காதது கிடையாது. உலகக் கோப்பையை 2011ஆம் ஆண்டு வென்ற பிறகுதான் அவர் ஓய்வை அறிவிக்க வேண்டும் என விரும்புகிறேன் - என்றார் காம்ப்ளி.

## மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி: பாகிஸ்தானின் ஒரே நகரில் நடத்த முடிவு

### அடுத்த வருடம் செப்ரெம்பரில்

டுபாய், ஒக். 17

8 நாடுகள் பங்குபற்றும் சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியை அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் நடத்த சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தானில் பல்வேறு நகர்களுக்குப் பதிலாக ஒரே நகரில் போட்டிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. டுபாயில் புதன் கிழமை நிறைவுபெற்ற 2 நாள் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

சம்பியன்ஸ் கோப்பை போட்டி, பாகிஸ்தானில் கடந்த செப்டெம்பர் 12 முதல் நடைபெற இருந்தது. ஆனால் பாதுகாப்புப் பிரச்சினையைக் காரணம்காட்டி அதில் விளையாட பல்வேறு நாடுகள் தயக்கம் தெரிவித்தன. இதையடுத்து போட்டியை ஒத்திவைத்தது சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

தற்போது டுபாயில் நடைபெற்ற கூட்டத்தில் அது குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

செப்டெம்பர் 24 முதல் ஒக்டோபர் 5ஆம் திகதி வரை போட்டியை நடத்த தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது இறுதிப் போட்டிக்கு முன்னதான ஓய்வுநாள் உட்பட போட்டியின் கால அளவு 12 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. முன்னர் 17 தினங்கள் நடத்தத் திட்டமிட்டிருந்தது.

போட்டி எங்கு நடத்தப்படும் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் இந்திய அணி விளையாட உள்ளது. அத்தொடர் முடிந்ததும் இடம் அறிவிக்கப்படும் என சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

## கும்ளேயின் அர்ப்பணிப்பை குறைத்து மதிப்பிட வேண்டாம்

### விமர்சகர்களுக்கு தேர்வுக்குழுத் தலைவர் பதிலடி

மும்பை, ஒக். 17

கும்ளேயின் அர்ப்பணிப்பு உணர்வு குறித்து யாரும் கேள்வி எழுப்ப முடியாது என்று இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் கூறினார்.

பெங்களூரில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணித் தலைவரும், சுழற்பந்துவீச்சாளருமான அனில் கும்ளேக்கு ஒரு விக்கெட்டைக் கூடக் கைப்பற்றவில்லை. ஆட்டத்தின் 4ஆவது நாளில் அவர் தோள்பட்டைக் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

இதனால் கும்ளே விமர்சனத்திற்குள்ளானார். முழு உடல்த் தகுதி இல்லாமல் அவர் விளையாடியிருக்கக்கூடாது. அணியின் மோசமான நிலைமைக்கு அவர்தான் பொறுப்பு என்று தேர்வுக்குழுவின் முன்னாள் தலைவர் வெங்சர்க்கார் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கும்ளேக்கு புதிய தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் முழு ஆதரவு தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக ஸ்ரீகாந்த் அளித்த பேட்டியில்,

கும்ளேயின் தோள்பட்டைக் காயத்தை ஒவ்வொருவரும் ஏன் பெரிதுபடுத்துகிறார்கள் என்பது உண்மையிலேயே எனக்குத் தெரியவில்லை. சொந்த மைதானத்தில் அவர் விக்கெட் எடுக்கவில்லை. அதற்காக அவர் முழு உடல்த் தகுதியுடன் இல்லை என்று அர்த்தம் கிடையாது. கும்ளே தன்னை முழுமையாக கிரிக்கெட்டில் ஈடுபடுத்திக் கொள்பவர். நமது அணிக்குச் சிறப்பான பங்களிப்பை அளித்து வருகிறார். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியை சேர்த்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார்.

அவர் மிகச் சிறந்த தலைவர். அணித் தலைவராகவும், பந்துவீச்சாளராகவும் இந்தத் தொடரில் அவரது பங்கு மிகவும் முக்கிய [illegible] அர்ப்பணிப்பு உணர்வு குறித்து [illegible] கேள்வி எழுப்பமுடியாது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரின்போது,



தாடை எலும்பு முறிந்த நிலையிலும், அவர் பந்துவீசிய அந்தத் துணிச்சலை மக்கள் யாரும் மறந்திருக்கமாட்டார்கள். முக்கியமான ஒரு தொடர் நடந்து கொண்டிருக்கும் போது, அவரைக் கண்டிப்பது சரியான அணுகுமுறை கிடையாது. கும்ளே மீது நான் முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

2ஆவது டெஸ்ட் போட்டி நடக்கும் மொகாலிக்குச் செல்கிறேன். அங்குள்ள நிலைமைகளைக் கண்காணிப்பேன். அடுத்த 2 டெஸ்டில் இந்திய துடுப்பாட்டக்காரர்களுக்கும், அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர்களுக்கும் இடையே கடுமையான போட்டி இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். என்னைப் பொறுத்தவரை இந்தத் தொடரை இந்தியா வெல்ல நல்ல வாய்ப்பு உள்ளது.

பெங்களூர் டெஸ்டில் இந்திய அணியின் செயற்பாடு மகிழ்ச்சி அளிக்கிறது. குறிப்பாக கடைசி நாளில் வீரர்களின் ஆட்டம் திருப்தி தருகிறது. ஏனெனில்கடைசி நாளில் துடுப்பெடுத்தாடுவது அவ்வளவு எளிது கிடையாது. என்னைப் பொறுத்தவரை 4 டெஸ்ட் கொண்ட தொடரை 0-1 என்று தொடங்குவதை விட சமநிலையடையச் செய்ததே சிறந்தது என்று நம்புகிறேன்- என்றார்.

## மொகாலி எனது சொந்த மைதானம்!

### பிரெட் லீ சொல்கிறார்

மொகாலி, ஒக். 17

மொகாலியில் நடக்கும் டெஸ்ட் போட்டி எனது சொந்த ஊரில் நடக்கும் போட்டி போன்றது என்று அவுஸ்திரேலிய வீரர் பிரெட் லீ கூறியிருக்கிறார்.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மொகாலியில் இன்று தொடங்குகிறது. இதற்கான இரண்டு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். அவுஸ்திரேலிய அணியில் வேகப்பந்துவீச்சாளர் ஸ்ருவர்ட் கிளார்க் மட்டும் பயிற்சி செய்யவில்லை. அவர் முழங்கைக் காயத்தால் அவதிப்பட்டு வருவதால் இந்த டெஸ்டில் விளையாடுவது சந்தேகமே.

பயிற்சியின் பின்னர் அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் பிரெட் லீ நிருபர்களிடம் கூறியதாவது, "ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட்டில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக நான் விளையாடி வருகிறேன். ஐ.பி.எல். போட்டிக்காக மொகாலியில் நிறைய ஆட்டங்களில் பங்கேற்றிருக்கிறேன். எனவே மொகாலி, எனது சொந்த ஊர் மைதானத்தில் நடக்கும் போட்டி போன்றதாகும். இது மிகச்சிறந்த இடம். இங்கு பந்து நன்கு எகிறி வரும் என்பதால் வேகப்பந்துவீச்சாளர்கள் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்ற முடியும் என்று நம்புகிறேன்.

முதல் டெஸ்ட் நடந்த பெங்களூர் ஆடுகளம் மிகவும் மெதுவாகக் காணப்பட்டது. அதில் பந்து எழும்பவில்லை. ஆனால் மொகாலி ஆடுகளத்தைப் பார்க்கையில், கடினமாக இருக்கும் போல் தெரிகிறது. இது இளம் வேகப்பந்துவீச்சாளர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பெங்களூர் டெஸ்டில் வெற்றிபெற முடியாமல் போனமை ஏமாற்றம் அளிக்கிறது. வெற்றிபெறவேண்டும் என்ற எண்ணத்துடன் தான் நாங்கள் களம் இறங்கினோம். ஆனால் முடியாமல் போய்விட்டது. இருப்பினும் நாங்கள் வெற்றிக்குரிய வழியை ஏற்படுத்திக்கொடுத்தமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த டெஸ்டில் நான் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தாவிட்டாலும், வெற்றிவாய்ப்பை உருவாக்கியதில் எனது பங்கும் இருந்தமை திருப்தி [illegible] 2ஆவது [illegible] றேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக அரசியல் கொந்தளிப்புக்கு புலிகளே காரணம்

# கருணாநிதியுடனும் ஜெயலலிதாவுடனும் இலங்கை விவகாரம் குறித்துப்பேச ஜனாதிபதி தயார்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய சொல்கிறார்



கொழும்பு, ஒக்.17

இலங்கை விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதியுடனும் எதிர்கட்சித் தலைவர் செல்வி. ஜெயலலிதாவுட னும் பேச்சுநடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜ ப க்ஷ தயாராக இருக்கிறார்.

இப்படிக் கூறியுள்ளார் பாதுகாப்புச் செயலாளர்கோத்தபாஜ ராஜபக்ஷ.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்புக்கு விடுதலைப்புலிகளே காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோ ஆகிய சேவைகளுக்கு தொலைபேசி மூலம் வழங்கிய செய்தியிலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்துமாறும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறும் தமிழகஅரசியல் கட்சிகள் விடுக்கின்றவேண்டுகோள்களின் பின்னணியில் விடுதலைப் புலிகள் உள்ளதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டிலிருந்து விடுக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்த வேண்டுகோள் குறித்து புதுடில்லி கொழும்புடன் கருத்துப் பரிமாற்றம் எதனையும் செய்யவில்லை. இலங்கையில் என்ன நடைபெறுகின்றது. பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நாங்கள் எவ்வளவு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் எனபது அதற்குத் தெரியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கருணாநிதியும், ஜெயலலிதாவும் பேச விரும்பினால் அவர், அவர்களுடன் பேச்சினை மேற்கொள்ளத் ஜனாதிபதி தயார் என்றும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர், யுத்த நிறுத்தமொன்றைச் செய்வதற்கு தகுந்ததொரு காரணம் அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள், இலங்கைப் பிரஜைகள் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் எனப் பேட்டியில் தெரிவித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ, அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எமது கடமை என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் தற்போது இடம்பெறுவது விடுதலைப் புலிகளின் தூண்டுதலுடனான பிரசாரமே எனத் தெரிவித்துள்ள அவர் கடந்த யுத்த நிறுத்த காலங்களில் என்ன நடைபெற்றது என்பது தனக்குத் தெரியுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இன்னுமொரு யுத்த நிறுத்தம் என்பதன் அர்த்தம் இலங்கையின் துயரங்களை நீடிக்கச் செய்வது என்பதே எனவும் தெரிவித்துள்ள பாதுகாப்புச் செயலாளர் தமிழ் மக்களுக்கு எவராவது உண்மையில் உதவ விரும்பினால் அவர்களை விடுதலைப்புலிகள் தோற்கடிப்பதற்கு இலங்கை அரசுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

இலங்கையில் மற்றுமொரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டால் என்ன நிகழும் என்றும் கோள்வியெழுப்பியுள்ள கோத்தபாய கடந்த 28 வருடங்களாகக் காணபடும் அதே நிலை தொடரும். அது நேர்மையற்ற செயல் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் காரணமாகப் பொதுமக்களுக்கு ஏற்படும் உயிரிழப்புகள் குறித்து எதனையும் தெரிவிக்காத பாதுகாப்புச் செயலாளர் தமிழ் நாட்டு மீனவர்கள் குறித்து நீண்ட கருத்தினை வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசியல் கட்சிகளின் அறியாமை குறித்து குற்றம் சாட்டியுள்ள கோத்தபாய சர்வதேச கடல் எல்லையை கடந்து தமது கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு கொழும்பில் அனுமதி வழங்கியுள்ளதாகவும், எனினும் இலங்கை மீனவர்களுக்கு இந்திய கடல் எல்லையில் மீன்பிடிப்பதில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களை எமது கடற்படை முகாமுக்கு அருகில் வர வேண்டாமென மாத்திரம் நாங்கள் கூறியுள்ளோம். எமது கடற்படைக் கலங்கள் பயணிக்கும் போது அப்பகுதியை தவிர்க்குமாறு கேட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சில இந்திய மீனவர்களைக் கைது செய்தாலும் கூட எச்சரிக்கப்பட்ட பின்னர் அவர்கள் கூடிய விரைவில் விடுவிக்கப்படுகின்றனர். எனினும் இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டால் மூன்று தொடக்கம் ஆறு மாதம் வரை தடுத்து வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படை இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவில்லை. எனினும் பல தடவைகள் விடுதலைப் புலிகளே தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். (சி)

## உற்பத்திப் பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.17

தென்மராட்சி பிரதேச மகளிர் அமைப்புகளின் மகளிர் சுயதொழில் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி நாளை சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும்

தென்மராட்சி பிரதேச செயலர் உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்சீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச்சபை பதில் பிரதிப்பணிப்பாளர் ஆர்.ஜெயமனோண் கலந்து கொள்வார். (203-207)

# இரு தமிழர்கள், இரு முஸ்லிம்கள் அம்பாறையில் சுட்டுக்கொலை

அம்பாறை, திருக்கோவில், வட்டமடு வயல் பிரதேசத்தில் வைத்து நேற்றுக்காலை 7 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் நான்கு விவசாயிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கஞ்சிகுடிச்சாறு வம்மியடிப் பகுதியை அண்மித்த காட்டுப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இரு தமிழர்களும் இரு முஸ்லிம்களுமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கோரளை வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சுந்தரலிங்கம், ஆலையடிவேம்பு காளிகோவிலடியைச் சேர்ந்த சின்னவன் மற்றும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஐ.எல்.எம். அபூபக்கர், முஹமட் இஸ்மாயில் அயாத்பாவா ஆகியோரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் அம்பாறை வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன. (அ-சி)

# ஓடு பிரித்து உள்ளே இறங்கிய திருடன் தவறி வீழ்ந்து வீட்டாரிடம் அகப்பட்டான்

யாழ்ப்பாணம், ஒக்.17

வீட்டின் ஓடு பிரித்து இறங்க முயன்ற திருடன் தவறி வீழ்ந்து வீட்டுக்காரரிடம் அகப்பட்டான்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு கொடிகாமம் பாலாவி வடக்கில் இடம் பெற்றது.

திருடனைப் பொதுமக்கள் படையினரிடம் ஒப்படைத்தனர்.

படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்று கூறப்பட்டது.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்த திருச்செல்வம் திருமறைச்செல்வன் என்ற குறிப்பிட்ட இளைஞரிடமிருந்து பொலிஸா நான்கு லட்சம ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் ஒரு லட்சம் ரூபா பணத்தையும் மீட்டுள்ளனர்.

இந்த இளைஞனை பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் அலெக்ஸ் ராஜா எதிர்வரும் 28ஆம் திகதி வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (203-207)

# வன்னிக்குப் புறப்பட்ட உணவு லொறிகள் ஷெல் தாக்குதலால் வவுனியா திரும்பின!

## பாதுகாப்பு உத்தரவாதம் தந்தாலே செல்ல முடியும் என்கிறார் ஐ.நா. அதிகாரி

கொழும்பு, ஒக். 17

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிச் சென்ற உலக உணவுத் திட்டத்தின் 50 லொறிகள் கடுமையான ஆட்லறி ஷெல் தாக்குதல் காரணமாக மீண்டும் நேற்று நண்பகல் வவுனியாவுக்கு திரும்பி விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளை நோக்கி நிவாரணப் பொருட்களுடன் சென்று கொண்டிருந்த லொறிகளே மீண்டும் வவுனியாவுக்குதிரும்பியுள்ளன என்றுவவுனியா தகவல்கள் தெரிவிக் கின்றன.

ஓமந்தைக்கு மாங்குளத்திற்கும் இடைப்பட்ட ஏ - 9 வீதியிலேயே ஆட்லறி ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினரே லொறிகளை உள்ளே போகவிட்டு, அவற்றுக்கு முன்பாக ஆட்லறி தாக்குதல் நடத்தினர் என வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் விடுதலைப் புலிகளே ஷெல் தாக்குதல் நடத்தினர் என்று இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

''வாகனத் தொடரணியில் நாங்கள் சென்று கொண்டிருந்த போது ஏ - 9 வீதிக்கு சமீபமாக கடும் சண்டை நடக்கும் சத்தங்கள் கேட்டன. வெடிச் சத்தங்கள் நாங்கள் சென்ற பகுதிக்கு அருகில் கேட்டதால் பாதுகாப்புக் கருதி நாங்கள் உணவு லொறிகளைத் திருப்பிக்கொண்டு வவுனியாவுக்கு வந்துவிட்டோம்'' என்று இலங்கைக்கான ஐ. நாவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இருதரப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு உத்தரவாதம் தரப்பட்டால் இன்று மீண்டும் அங்கு உணவு லொறிகள் செல்லவுள்ளன என்றும் அவர் கூறினார்.

(அ-சி)

# ஈழத் தமிழருக்குத் தீர்வு வரும்வரை தமிழக ஆதரவு தொடரவேண்டும்!

## டென்மார்க் தமிழ் அமைப்புகள் நன்றி தெரிவிப்பு

கோப்பனேக்கன், ஒக்.17

தமிழ் நாட்டில் உள்ள எமது தொப்புள் கொடி உறவுகளும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் நிதான சிந்தனையுடன் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றமை ஈழத்தமிழர்களாகிய எங்களை இந்த வேதனையான சூழலிலும் மிகவும் மகிழ்ச்சியடைய வைக்கின்றது என்று டென்மார்க் தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் டென்மார்க் தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தீவு முழுவதும் குறிப்பாக, ஈழத்தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்கள இராணுவம் மிகவும் கொடூரமான முறையில் அப்பாவி மக்கள் மீது நடத்தி வரும் ஆள்கடத்தல்கள், கைதுகள், வான் குண்டுத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள் மூலம் அட்டூழியங்களை மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் அவர்களின் சொந்த நிலங்களை இராணுவ நடவடிக்கைகள் மூலம் அபகரித்து, அவர்களை அகதிகளாக்குவது மட்டுமல்லாமல் அவர்களால் தங்களுடைய அத்தியவசியத் தேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகளை அழித்து நிர்க்கதியாக்கி வருகின்றது.

### தமிழரை பட்டினி, நோய் மூலம் சாகடிப்பதே அரசின் நோக்கம்

இதேவேளை, சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு எதிராக அனைத்துலகத்திற்கு பொய்ப்பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விடுவதுடன், அவர்களுக்கு உதவ வந்த மனித நேய அமைப்புகளைப் போரில் சிக்கியுள்ள மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து வெறியேற்றி, அவர்களுக்குச் சேர வேண்டிய உதவிகளை நிறுத்த முயற்சிக்கின்றது. இதன் மூலம் அகதிகளானோரை நோய், பசி, பட்டினி மூலம் சாகடிப்பதே சிங்கள தேசத்தின் அடிப்படைக் கொள்கையாக உள்ளது.

சிங்களவரின் இந்த இன அழிப்பு நீண்டகாலமாக வெளியுலகின் கவனமின்றி நடைபெற்று வருகின்றது.

போர்க்காலத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சர்வதேச சட்டங்கள் அனைத்தையும் சிங்கள அரசு புறந்தள்ளிவிட்டு நவகாலனித்துவ உலக வல்லாதிக்க போல் சிங்கள நாடு நடந்து கொள்வதை உலகிலேயே பெரிய ஜனநாயக நாடான இந்தியா கைக்கட்டிப் பார்த்துக்கொண்டிருப்பது இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மிகவும் வேதனையளிக்கின்றது.

இவற்றையெல்லாம் உணர்ந்து தமிழ் நாட்டில் உள்ள எமது தொப்புள் கொடி உறவுகளும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் நிதான சிந்தனையுடன் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றமை ஈழத் தழர்களாகிய எங்களை இந்த வேதனையான சூழலிலும் மிகவும் மகிழ்ச்சியடைய வைக்கின்றது.

எமது உறவுகளின் பலம்மிக்க இந்த நடவடிக்கைகள் ஈழத்தமிழர்களுக்கு நீதியானவொரு தீர்வு வரும் வரை தொடர வேண்டுமென்பதே அனைத்துத் தமிழர்களினதும் அவாவும், எதிர்பார்ப்புமாகும்.

தமிழ் நாட்டில் எழுச்சியில் பங்குபற்றும் அனைத்து தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும் டென்மார்க் வாழ் தமிழ் மக்கள் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லிக்கு உண்மைநிலையை விளக்கி அதன் ஆலோசனைகளைப் பெறுவோம்

## வெளிவிவகாரச் செயலாளர் கோஹன சொல்கிறார்

இலங்கையில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் அரசியல் தீர்வு முயற்சிகள் குறித்த புதுடில்லியின் கவலைகளைப் போக்குவதற்காக அரசு அந்த நாட்டிற்கு நிலைமைகளைத் தெளிவுபடுத்தி அதன் ஆலோசனைகளைப் பெறுமென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹண இந்தியன் எக்ஸ்பிரஸிற்கு தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் பயங்கரவாதிகளுக்கு எதிரானது என்பதால் அரசு அதனை நிறுத்தப் போவதில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''ஆரம்பத்திலிருந்து எங்களால் வடக்கிலும், கிழக்கிலும் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் பயங்கரவாதிகளுக்கு எதிரானவை; தமிழ் மக்களுக்கு எதிரானவையல்ல என்பதைத் தெளிவுபடுத்தி வந்துள்ளோம் என்றும் பாலித கோஹண குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படவில்லை'' - என்றும் அவர் கூறினார்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளின் போது அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இராணுவ நடவடிக்கை காரணமாக 2 லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளது உண்மை. எனினும், குறிப்பிடத்தக்க அளவிற்கு உயிரிழப்புகள் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளின் புள்ளி விவரங்களே இதனை உறுதி செய்கின்றன -என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சென்னையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையும் என்பதால் எல்லா மாவட்டங்களிலுமிருந்து வந்து கலந்துகொண்டு மனிதச் சங்கிலியைப் பெருமளவில் நடத்திட அனைத்துக் கட்சியினரும் குறிப்பாக மகளிர், மாணவர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள், விவசாயிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது - என்றுள்ளது. (அ-சி)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியும் மேற்கொள்ளும் சதித்திட்டத்தினை தோல்வியுறச் செய்ய தேசப்பற்றாளர்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.

இந்தியாவின் அச்சுறுத்தலுக்கு அடிபணியலாகாது. அவர்களால் எம்மை என்ன செய்ய முடியும். மிஞ்சினால் வான் பரப்பில் இருந்து பருப்பு மூடைகளை மட்டுமே போட முடியும் வாஷிங்டன், ஒஸ்லோ, ஜேர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகள் கடந்தகாலங்களில் எமது பிரச்சினையில் தலையிட்டு மூக்குடைபட்டன. அன்று புலிகள் தோல்வியுறும் இறுதித்தருவாயில் அவர்களும் இன்று தமிழ் நாட்டில் இடம்பெறுவது போன்றே நாடகங்களை அரங்கேற்றினார்கள். எமது படையினர் விடுதலைப்புலிகளை முழுமையாக அழிக்கும் வெற்றிகரமான யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இருக்கின்றனர். இதனைத் தடுக்க மேற்குலகம் பல்வேறு சதிகளை மேற்கொள்கிறது. புதுடில்லியும், வாஷிங்டனும் இணைந்து பிரபாகரனைப் பாதுகாக்கின்ற நாடகத்தினை அரங்கேற்றுகின்றன.

தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதி, சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி இரண்டு வாரங்களில் இலங்கை யுத்தத்தை நிறுத்த இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கா விட்டால் எம்பிக்கள் 40 பேர் இராஜிநாமா செய்வார்கள் என அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

### தமிழக அரசியல் வாதிகளின் கனவு கலைந்தது

இவையெல்லாம் தமிழ்மக்கள் மீது வைத்துள்ள அன்பின் வெளிப்பாடல்ல. தமிழ் நாட்டு அரசியல் வாதிகளின் நீண்டகாலக் கனவு கலைந்து போவதை தாங்கிக் கொள்ள முடியாமலே போராட்டங்களை நடத்துகின்றனர்.

வேலுப்பிள்ளை பிரபாகரனை பயன்படுத்தி இலங்கையின் வடகிழக்கையும் தமிழகத்தையும் இணைத்து விசாலமான தமிழீழத்தை அமைப்பதே தமிழ் நாட்டு அரசியல் வாதிகளின் நீண்டகாலக் கனவாகும்.

ஆனால் இன்று எமது படையினர் பிரபாகரனை சுற்றி வளைத்துள்ளனர். எனவேதான் போராட்டங்களை நடத்துகிறார்கள். இலங்கை இறைமை மற்றும் சுதந்திரமான நாடென பிரதமர் மன்மோகன்சிங் தமிழ்நாட்டுத் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தி இந்திய எல்லையைக் காண்பிக்க வேண்டும்.

எமது மக்கள் மன்மோகன்சிங்குக்கு வாக்களிக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷவுக்கே வாக்களித்து ஜனாதிபதி ஆக்கினார்கள். அதுவும் பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிப்பதற்காகவே ஆணைவழங்கினார்கள்.

இலங்கை இந்தியாவின் மாநிலம் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எனவே எம்மை அடக்கியாள முனையக் கூடாது - என்றார். (அ)

# புதுக்குடியிருப்பிலும் முகமாலையிலும் குண்டுவீச்சு

கொழும்பு, ஒக்.17

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மற்றும் யாழ். முகமாலைப்பகுதிகள் மீது நேற்று விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இருந்து தென்கிழக்கே சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப்புலிகளின் ஆயுதக் களஞ்சியத்தின் மீது காலை 9.30 மணியளவிலும், யாழ்ப்பாணம் முகமாலைக்கு தெற்கே நான்கு கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப்புலிகளின் தளபதிகள் ஒன்றுகூடும் தளத்தை இலக்குவைத்து முற்பகல் 10.45 மணியளவிலும் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்று விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்காரர் தெரிவித்தார்.

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியைத் தாம் முறியடித்து விட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவித்துள்ளதாவது:

முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறீலங்காப் படையினர் செறிவான எறிகணை, பல்குழல் வெடிகணை மற்றும் டாங்கி சூட்டாதரவுகளுடன் பெரும் எடுப்பில் முன்நகர்வினை மேற்கொண்டனர்- அதற்கெதிராக விடுதலைப்புலிகள் நேற்று முற்பகல் 11.30 மணி வரை தாக்குதல் நடத்தி படையினரின் முயற்சி யினை முறியடித்தனர்- இதில் 15 படையி னர் கொல்லப்பட்டுள்ளனர், 40 பேர் காயம டைந்துள்ளனர்- புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை- முகமாலை முன்னரங்க நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோதலில் இராணுவத்தினர் மூவர் உயிரிழந்தனர். 10 பேர் வரை படுகாயமடைந்தனர் என்று படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளை நோக்கி நேற்றுக்காலை 53 ஆவது படைப்பணி கவச வாகனங்களின் தாக்குதல் உதவியுடனும் பிற்களச் சூட்டாதரவுகளுடனும் முன்னேற முயன்ற வேளையிலேயே இச்சமர் மூண்டது என்றும் இச்சமரில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் இருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் படைத்தரப்பில் கூறப்பட்டது. (அ-1)

## மன்மோகன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாவுக்கான இலங்கைத் தூதுவர் சி.ஆர். ஜெய சிங்க.

இலங்கை நிலைமை இந்தியாவுக்கு மிகுந்த கவலை அளிப்பதாக புதன்கிழமை அன்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியிருப்பது குறித்து புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் இலங்கைத் தூதுவரிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டனர்

அப்போது அவர் மேலும் கூறியதாவது:

எந்தப் பிரச்சினை, எந்த வடிவத்தில் வந்தாலும், இந்தியாவுடன் கொண்டுள்ள மிக நெருங்கிய பரஸ்பர நல்லுறவுக்குப் பங்கமில்லாமல் அதனைப் பேணுவதை இலக்காக கொண்டே இலங்கை அதனைக் கையாளும்.

இரண்டு நாடுகளுக்கு இடையில் முறுகல் நிலை தோன்றியிருப்பதாக நீங்கள் கூறுவதை நிராகரிக்கிறேன் - என்றார் ஜய சிங்க.

இதேவேளை - தமிழகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து இது வரை உத்தியோகபூர்வமாக கருத்துக்கூறவில்லை. அது உள்நாட்டு விடயம் என்று மட்டும் கருத்து தெரிவித்திருக்கிறது.

# இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை தொடரும் என்று பிரிட்டன் நம்பிக்கை

கொழும்பு, ஒக்.17

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இலங்கைக்குத் தொடர்ந்து கிடைக்கும் எனத் தாம் நம்புகிறார் என கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவர் பீற்றர் ஹெயிஸ் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சில விடயங்களை நிறைவேற்ற வேண்டும் என விதிக்கப்பட்ட நிபந்தனைகளை அரசு உரிய முறையில் செயற்படுத்தும் என்று தாம் எதிர்பார்க்கின்றார் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக சம்மேளனத்தின் வைபவம் ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரித்தானியத் தூதுவர் பீற்றர்ஹெயிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஜி.எஸ்பி. வரிச்சலுகை மிகவும் முக்கியமானது. நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி, மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நாடுகளுக்கே ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வழங்கப்படுகின்றது.

இலங்கை அரசின் கடந்த கால நடவடிக்கைகள் திருப்தி அளிக்கவில்லை. இதன் காரணமாக ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் 22நிபந்தனைகளையும் இலங்கை அரசு நிறைவேற்றுவதாக உறுதியளித்திருக்கின்றது. அவ்வாறு திருப்தி தரக்கூடிய நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடம் உள்ளது.

இதன் காரணமாக இலங்கை அரசுக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகை டிசெம்பர் மாதத்தின் பின்னர் மீண்டும் புதுப்பிக்கப் படலாம் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

## நாச்சிக்குடாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் படைத்தரப்பு கூறியது.

நேற்றைய மோதலில் 58 ஆவது படைப்பிரிவே ஈடுபட்டது கைப்பற்றப்பட்ட பகுதியில் இராணுவத்தினர் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றைய மோதல் தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து தகவல் எதுவும் வெளிவரவில்லை.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில், பொதுமக்களின் உரிமை கள் மதிக்கப்பட வேண்டும் என்றும், அவர்கள் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார். அந்த அறிக்கையில்மேலும் குறிப்பிடப் பட்டிருப்பவை வருமாறு:-

அத்தியாவசியப் பொருள்கள் வன்னி மக்களை சென்றடைய அனுமதிக்கப்பட வேண்டும். இராணுவத் தீர்வு பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் ரீதியான தீர்வே காணப்பட வேண்டும்.

இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இந்திய அரசு இதை உறுதிசெய்ய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# முகமாலை முன்னரங்கில் பின்பக்கம் இருந்து வந்த சூட்டினால் சிப்பாய் மரணம்

முகமாலை முன்னரங்கப் பகுதியில் பணியில் இருந்த சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். எனினும் அவர் போரில் சிக்கி மரணமாகவில்லை என்று சந்தேகம் எழுப்பப்பட்டது.

சிப்பாயின் மரணம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே அவரது மரணம் சம்பவித்த விதம் குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சிப்பாய் முன்னரங்கில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது பின்பக்கத்தில் இருந்து வந்த வேட்டுக்கிலக்காகி மரணமானார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பொலிசாரின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் சாவகச்சேரி மேலதிக நீதிவான் எஸ். அலெக்ஸராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

## யுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இப்படி இலங்கை அரசின் உத்தியோகபூர்வ ஊடகமான இலங்கை வானொலி நேற்றுக் காலை அறிவித்தது.

தன்னையும், தனது / பாதுகாப்புச் செயலாளரையும், முப்படைத் தளபதிகளையும் கொல்வதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் தற்கொலைத் தாக்குதல் நபர்களை அனுப்பியிருக்கையில், தனது அரசு யுத்தநிறுத்தம் ஒன்றைச் செய்ய எண்ணவில்லை என்று ஜனாதிபதி கூறினார்.

இரண்டு வாரங்களுக்குள் வன்னி இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி விடுத்த நிபந்தனைக்கு பதிலளிக்கும் விதமாகத் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதி இப்படித் தெரிவித்துள்ளார்.

தற்கொலைத் தாக்குதல் நபர்கள் கொழும்புக்குள் ஊடுருவி இருக்கையில் - அவர்களின் இலக்கு இலகுவாக நிறைவேறுவதற்கு உதவும் வகையில் - இலங்கை அரசு வன்னி இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவேண்டுமா என்று ஜனாதிபதி இந்திய அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு அரசியல் வாதிகளால் வன்னிப் படை நடவடிக்கையை நிறுத்தச் செய்ய முடியாது என்பதை அரசு உறுதிபடத் தெரிவிக்கின்றது.

ஆகவே புலிகளின் சதித்திட்டத்திற்குப் பலியாக வேண்டாம் என இலங்கை அரசுஇந்திய அதிகாரிகளைக்கேட்டுக்கொள்கிறது.

வன்னியில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை வழங்குவதற்கு இயலுமான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது என்பதையும் அரசு மேலும் தெரிவித்துக்கொள்கிறது.

- இவ்வாறு இலங்கை வானொலியின் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.(அ-சி)

விக்னா கல்வி நிறுவனம்
அளவையியல் திரு.கமல்
A/L 2009 சமூக சிந்தனையும் நிகழ்ச்சுகளும் (9மணி)
A/L 2010 குறியீட்டளவை (8மணி)
ஆரம்பம்:- 17.10.2008 (சனி)
(C/555464)

விக்னா கல்வி நிறுவனம்
தமிழ் திரு.குழந்தை
A/L 2009 (8மணி)
A/L 2010 (10மணி)
ஆரம்பம்:- 17.10.2008 (சனி)
(C/555465)

விக்னா கல்வி நிறுவனம்
பொருளியல் திரு.B.கஜீதரன்
A/L 2009 பணமும் வங்கியும் (11மணி)
A/L 2010 சந்தைச் சமனிலை (8மணி)
ஆரம்பம்:- 17.10.2008 (சனி)
(C/555466)

விக்னா கல்வி நிறுவனம்
புவியியல் திரு.கரேன்
A/L 2009 உழவர் விவசாயப் பாகுபாடு (9-10மணி)
A/L 2010 எரியம் (8-9மணி)
Paper Class (7-8 மணி)
ஆரம்பம்:- 17.10.2008 (சனி)
(C/555467)

நாநல உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
சனி, ஞாயிறு - 2 மணி - 4 மணி வரை நடைபெறுகிறது.
D.M.I
நாவலர் வீதி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org